சிவமயம்

குமரகுருபரன்



மலர் 11 1960-௵ குருபூஜை மலர் இதழ் 5

ஆசிரியர் குழு

1. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. ராவ்சாஹிப், வித்துவான், திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.

4. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

5. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்டெண்ட் கமிஷனர், இந்து அறநிலைய இலாகா,
தஞ்சாவூர் (மேற்கு)

6. திரு. ம. ரா. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
இந்து சமய அறநிலைய உதவி ஆணையர் (ஓய்வு).
'வள்ளுவர் குறடு'' மதுரை.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சி

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
272-ம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள்

சார்வரி ௵ வைகாசி ௴ 29 உ சனிக்கிழமை



11-6-1960

ஸ்ரீ காசி மடம் :: திருப்பனந்தாள்

உ

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூசைத் திருநாளன்று

வடக்கே இமயமலையில் 12,000 அடி உயரத்திலுள்ள திருக்கேதாரம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலுள்ள தலங்களில் நடைபெறும்

அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பு

தருமங்களின் விபரம்

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றவை

	தொடர் எண்	தரும எண்	மூலதனம் ரூபாய்	அன்னம்பாலிப்பு நடைபெறும் தலங்கள்	அன்னம் பாலிப்பு செலவுத் தொகை	கண்காணிப்பவர்கள் விலாசம்
சிவ	1	224	7,000	திருக்கேதாரம்	ரூபா 277	ஸ்ரீ கணேஷ் சங்கர், கேதாரநாத் பண்டா, கேதாரநாத், இமயமலை
சிவ	2	215	7,000	ரிஷிகேசம்	208	ஸ்ரீ சுவாமி சிவாநந்தஜி மகராஜ், சிவானந்த ஆச்ரமம், ரிஷிகேசம்
சிவ	3	200	8,000	ஹரத்துவார்	277	போலாநாத் ஆச்ரமம், ஹரத்துவார்
சிவ	4	263	5,600	பிரயாகை	208	ஜோஷி மடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகள் மடம்
சிவ	5	11	10,000	ஸ்ரீ காசி	346	ஸ்ரீ குமாரசாமி மடம், கேதாரக் கட்டம், வாரணசி
சிவ சிவ	6	277	7,000	திருக்காளத்தி	205	திரு. க. சுப்பிரமணிய அய்யர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை
சிவ	7	270	7,000	திருத்தணிகை	208	ஷை ஷை
சிவ சிவ	8	220	7,000	காஞ்சிபுரம்	205	ஷை ஷை
சிவ சிவ	9	284	7,000	திருக்கழுக்குன்றம்	205	ஷை ஷை
சிவ சிவ	10	9[illegible]	5,000	சென்னை	150	செ[illegible]புரி அன்னதான சமாஜம், சென்னை
சிவ	11	252	7,000	திருவண்ணாமலை	277	திரு. தி. சண்முகசுந்தர ஓதுவார், திருவண்ணாமலை

சிவ சிவ	12	207	20,000	சிதம்பரம்	150	ஸ்ரீ காசிமடம் சிதம்பரம்
சிவ சிவ	13	265	5,000	ஆச்சாள்புரம்	200	திரு. சே. முருகேசம் பிள்ளை
சிவ சிவ	14	262	5,000	சீர்காழி	150	திரு. வி. சுவேதாரணியம் அய்யர், அட்வகேட், சீர்காழி
சிவ	15	250	7,000	வைத்தீசுவரன்கோவில்	208	திரு. R. S. ராமையா பிள்ளை, பூங்குடி முதலியார் சத்திரம், வைத்தீசுவரன்கோவில்
சிவ	16	287	10,000	மாயூரம்	297	திரு. G. S. பிள்ளை (கேதாரம் பிள்ளை), பல்லவராயன்பேட்டை
சிவ சிவ	17	139	1,00,000	திருப்பனந்தாள்	3500	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்
சிவ	18	253	7,000	சுவாமிமலை	208	திரு. வி. சுந்தரேசய்யர், ஷராப், கும்பகோணம்
சிவ சிவ	19	268	6,000	திருவையாறு	200	திரு. அண்ணுசாமி பாகவதர், திருவையாறு
சிவ சிவ	20	264	5,000	திருப்புகலூர்	200	திரு. N. M. சோமசுந்தரம் பிள்ளை, திருப்புகலூர்
சிவ	21	238	7,000	திருவாரூர்	208	திரு. டி. சோமாஸ்கந்த தேசிகர், திருவாரூர்
சிவ சிவ	22	261	7,000	திருவானைக்கா	208	திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி
சிவ	23	271	10,000	பழநி	297	ஸ்ரீ சாதுசுவாமிகள் மடம் (ஸ்ரீ நாகப்பூர் சுவாமிகள்) பழநி
சிவ சிவ	24	239	2,50,000	மதுரை	500	திரு. சிவதர்மபாஸ்கர ம. க. சுந்தரேச பட்டர், மதுரை
				கன்னியாகுமரி ஆச்சிராமம் வகையரு தருமங்கள்		
சிவ சிவ	25	258	5,000	திருக்குற்றாலம்	200	திரு. A. C. சண்முகநயினர் பிள்ளை, B.A.,B.L., திருக்குற்றாலம்
சிவ சிவ	26	247	5,000	பழையபாவநாசம்	148	திரு. D. மரகதசுப்பிரமணிய பிள்ளை, அம்பாசமுத்திரம்
சிவ	27	21	9,000	ஸ்ரீவைகுண்டம்	277	திரு T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A.,B.L., ஸ்ரீவைகுண்டம்
சிவ சிவ	28	95	5,000	திருச்செந்தூர்	148	௸ ௸
சிவ	29	12	10,000	இராமேசுவரம்	346	ஸ்ரீ காசிமடம், சன்னிதித்தெரு, இராமேசுவரம்
சிவ	30	201	7,000	கன்னியாகுமரி	208	ஸ்ரீ காசிமடம், ஆச்சிராமம்

உ

சிவ சிவ

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள்பெற்றார்; மதுரை மீனாட்சியம்மை மீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார்; திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை அருளினார்; தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக்கோவை' பகர்ந்தார்; ஆரூர், வேளூர், தில்லை தரிசித்து, மாலை, கோவை முதலியன பாடினார்; காசி சென்று, 'சகலகலாவல்லி மாலை,' 'காசிக் கலம்பகம்' முதலியன அருளினார்; சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்யா குருவாகத் திகழ்ந்தார்.

செயற்கரிய செயல்கள் பல புரிந்த குமரகுருபர முனிவர் பெருமானின் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

வேத புருடனும் விராட் புருடனுமே
இனையநின் தன்மைமற் றெம்ம னோரும்
நினையவும் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழிய பெருமநின் தகவே
வாழியெம் மனனும் மணிநா வும்மே. – மதுரைக்கலம்பகம்

ஸ்ரீ காசி மடம் :: திருப்பனந்தாள்

குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 4-'60.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

272-ம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள்

புத்தக விற்பனை — விலைமலிவு அறிவிப்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கட்டளையிட்டருளிய வண்ணம் கீழே குறிக்கப்பெற்றுள்ள புத்தகப் பிரதிகள் நாளிது மே, ஜுன், ஜுலை ஆகிய மூன்று மாதங்களில் மட்டும், பாதி விலைக்கு விற்பனை செய்யப்பெறும். தபால் கட்டணம் வேறு.

(பிரதிக்கு)


	புத்தக விபரம்		தற்சமய விலை ரூ. நபை.	மலிவு விலை ரூ. நபை.	அஞ்சல் கட்டணம் ரூ. ந.பை.
1.	கந்தர் கலிவெண்பா மூலமும் - உரையும்	—	0 37	0 18	0 14
2.	திருக்கயிலைத் திருமுறை	—	0 37	0 18	0 14
3.	திருக்கடவூர் திருமுறையும் பிரபந்தங்களும்	—	0 19	0 10	0 08
4.	திருக்கடவூர் அபிராமிபட்டர் பிரபந்தம்	—	0 31	0 15	0 08

கிடைக்குமிடங்கள்:— 1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.

2. "தியாகராஜ விலாசம்"
53; பிள்ளையார்கோவில்த்தெரு
திருவட்டீஸ்வரன் பேட்டை, திருவல்லிக்கேணி
சென்னை - 5

குறிப்பு: புத்தகப் பிரதிக்குரிய தொகையை தபால் ஸ்டாம்பாக அனுப்பி வைத்தாலும் புத்தக அஞ்சல் மூலம் பிரதிகள் அனுப்பி வைக்கப் பெறும்.

திருவனந்தபுரம் – Zoo (Lion in a cage)



படம் :- ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் உதவியது.

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 11 | 1960-ஞு வைகாசித் திங்கள் | இதழ் 5

சிதம்பரச் செய்யுட் கோவை

தருமையாதீனம் முதுபெரும்புலவர்,

திரு. மாணிக்கவாசக அடிகள்

(முத்து. சு.)

(கட்டுரை 34)

பரமசிவன் சுத்தமாயா புவனம் முடிய எல்லாம் ஒடுக்கும் முழுமுதல்வன், அவனையே மகாசங்கார காரணன், சங்கார காரணன் என்னும் சிவாகமங்கள். திருமால், அயனோடும் கூடக் குணதத்துவத்தில் வைகிப் பிரகிருதிபுவனம் முடிய ஒடுக்கும் குணிருத்திரனைச் சங்கார காரணன் என்று கொள்வதில்லை. அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்காரகாரணனும் அல்லன். பரமசிவனுடைய சுதந்திரவடிவங்களுட்பட்டவனும் அல்லன்.

பரமசிவன் 1. இலயம் 2. போகம் 3. அதிகாரம் எனும் மூன்று அவத்தையிலும் முறையே 1. அருவம் 2. அருவுருவம் 3. உருவம் எனும் மூன்று திருமேனி கொண்டு, 1. சத்தன் 2. உத்தியுத்தன்3. பிரவிருத்தன் என்றும் 1. சிவன் 2. சதாசிவன் 3. மகேசன் என்றும்,

பெயர் பெற்று நிற்பன். இவ்வேறுபாடு தொழிலால் ஆயிற்று. பொருளால் வேறுபாடு இல்லை. பரமசிவனே சிவனும் சதாசிவனும் மகேசனுமாவான். உருத்திரனை இங்குச் சேர்க்காமையை அறிக.

பசுக்கூட்டத்தில் பிரளயாகலரில் பக்குவ முடையவன் சிகண்டருத்திரன். இது சைவாகமங்கள் கூறும் உண்மை. பரமசிவனுக்கு மகேசுவரமூர்த்தி முடிவான திருமேனியே சுதந்திர வடிவம். ஏனையவை அத்தகையன அல்ல.

மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்து எண்ணுவோர் சைவாகமப் பொருளை அறியாதவர். நம்மாழ்வார் முதலோர் மூவருள் ஒருவனாக (உருத்திரனாகக் கொண்டு பாடியதை அவரவர் பாடல்களிற் காண்க. பரமசிவனை அறியாத நிலை அவர்க்கே உண்டு. ஏனையோர்க்கு உண்டு என்பதில் வியப்பு யாது? சைவர்க்குத் தெரியாததில் மிக்க வியப்புறுவர் சிலர். எமக்கு ஆண்டும் வியப்பில்லை (அஃது ஒன்று மட்டும் தெரியாதிருப்பின் வியப்புண்டாகும் ஆதலின்).

1) நம்மவர் அவரே மூவர் என்றே எம்பிரானொடும் எண்ணி
விண்ணுண்டு மண்மேல் தேவரென்றே இறுமாந்து என்ன
பாவம் திரிதவரே. என்றது திருவாசகம்,

2) தேவரில் ஒருவன் என்பர் திருவுருச்சிவத் தேவர் மூவராய்
மூவராய் நின்ற தோரார்.

3) தேவராயும் அசுரராயும் சித்தர் செழுமறைசேர்
நாவராயும் நண்ணு விண்ணொரிகால் நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசன் என்னும்
மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே.

4) வரியாய மலரோனும் வையந் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளுதற்கு அங்கு

அரியானும் அறியாத கள்ளில் மேயான்
பெரியான் என் றறிவார்கள் பேசுவாரே.

5) மாவை உரித்து அதள் கொண்டு அங்கம் அணிந்தவனை
வஞ்சர்மனத்து இறையும் நெஞ்சணுகாதவனை
மூவர்உருத் தனதா மூலமுதற்கருவை.

6) படைத்து அளித்து அழிப்பமும் மூர்த்திகள் ஆயினை.

7) தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்.

8) முந்தும் நடுவும் முடிவும் ஆகிய மூவர் அறியாச்
சிந்துரச் சேவடியானை.

9) முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்.

10) அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பனும் தானே.

11) வீரன் அயன் அரி வெற்பலர் நீர்எரி பொன்னெழிலார்
காரொண் கடுக்கை கமலம் துழாய் விடைதோல் பறவை
பேரொண் பதிநிறம் தார்இவர் ஊர்தி வெவ்வேறென்பரால்
யாரும் அறியாவகை எங்கள் ஈசர் பரிசுகளே.

குறிப்பு :-

1. பேர்	2. பதி	3. தார்	4. ஊர்தி	
1. உருத்திரன்-வீரன்	வெற்பு (கயிலை)	கடுக்கை (கொன்றை)	விடை	
2. பிரமன்-அயன்	அலர் (தாமரை)	கமலம் (தாமரை)	தோல்(யானை, அன்னம்)	இவ்வளவும் ஈசர் பரிசுகள் ஆகும்
3. விட்டுணு-அரி	நீர் (பாற் கடல்)	துழாய் (துளசி)	பறவை (கருடன்)	

இப்பதினொன்றும் சிவஞான சித்தியாரிலும் திருமுறைகளிலும் இருந்து சிவஞான மாபாடியத்துட் காட்டப்பட்டவை.

'சிவதத்துவ விவேகம்' உடையார் (அப்பைய திட்சிதர்) 'குணாதீதன்' என்னும் சுலோகத்தில் வினாவிடைகளால் விரித்துக்

காட்டியதும் ஈண்டு உணரத் தக்கது. அதன் கருத்துள்ள மொழி பெயர்ப்புக்களுள் ஒன்று இது :—

குணங்களைக் கடந்தோய் எனினும்மா யையினைத்
தோய்தலால் குணம்உடை யவன்போல்
அணங்கொரு பாலும் கறைமிடற் றழகும்
அம்பகம் மூன்றும்ஆம் உருக்கொண்
டிணங்குறும் நாமம் சிவன்பவன் முதலா
இயைந்தயன் அரிஅரன் மூன்றும்
உணங்கிடா வுலகை நடாத்துவோன் ஆகி
ஓங்கினை நீங்கரும் பொருளே.

சிகண்டருத்திரன் நான்முகனும் திருமாலும்போலச் சகலரின் அன்றிப் பிரளயா கலரில் பக்குவம் உடையோன் ஆகிக் கட்டு நீங்கி முத்திபெற்ற கடவுள் ஆவான்; பரமசிவனுக்குரிய எல்லாப் பெயர்களும் வடிவமும் தொழிலும் பெற்றுடையவன்; சைவாகமங்களை அறிவுறுக்கும் ஆசிரியன் ஆனான்; ஆதலின் அயனுக்கும் அரிக்கும் மேலாகிச், சைவத்தின் எய்திச் சமய தீக்கை பெற்றோரால் வழிபடப் பெறுங் கடவுளாயினான்.

ஞாயிறு ஒன்றே தன்னையும் விளக்கும் தன்னொளியால் பொருள்களையும் விளக்கும். பொருள்களை விளக்குங்கால் 'கதிர்' என்றும் தன்னை விளக்குங்கால் 'கதிரோன்' என்றும் தாதான் மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்கும். அதுபோலப் பேரறி வாகிய சைதன்யம் ஒன்றே புறப்பொருளை நோக்காமல் அறிவு மாத்திரமாய்த் தன் இயல்பின் நிற்பதும் புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதும் ஆகிய இரண்டியல் புடையது. அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையில் 'சக்தி' என்றும் புறப்பொருளை நோக்காமல் அறிவுமாத்திரமாய் அவா வாமல் நிற்கும் நிலையில் 'சிவம்' எனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து குணகுணியாய் நிற்கும். (சித்தாந்த சாராவளி காண்க).

1. பரநாதம் 2. பரவிந்து 3. அபரநாதம் 4. அபர விந்து 5. சதாசிவன் 6. மகேசன் 7. உருத்திரன் 8. மால்

9. அயன் என்னும் ஒன்பதும் 'நவபேதம்' எனப்படும். முதல் ஆறும் இலயம் போகம் அதிகாரம் என்னுமுன்றனுள் அடங்கும். இங்குச் சூக்குமவதிகாரமே குறிக்கொள நின்றது.

தூலவதிகாரத்தில் அநந்தேசன் திரிமூர்த்திகளை அதிட்டித்து மோகினி மான்களின் நின்றும் சுத்தாசுத்தப்ரபஞ்சத்தையும் அசுத்தப்ரபஞ்சத்தையும் தோற்றுவித்துத் தொழில் செய்வான். அநந்தேசன் விஞ்ஞானகலருட் பக்குவனுய் முத்திபெற்று அதிகார மலவாசனை மட்டும் உடையவன். உருத்திரன் முற்குறித்தவாறு பிரளயாகலருட் பக்குவனுய் முத்தி பெற்றுத் தூலமல வாசனை யவன். ஏனைய மாலும் மலரவனும் சகலருட் புண்ணிய மிகுதிப்பாட்டால் அதிகார சத்திபெற்றுடையவர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிய திருச்சிவபுரத் திருப்பதிகத்தின் முதலில் உள்ள திருப்பாடல்களில் பிரமன், விஷ்ணு, முதலோர்க்குச் சிவபிரானே உயிராயிருந்து பேணிக் காத்தருள்கின்ருன். இவ்வுண்மையை நன்கு நோக்கின் விளங்குதல் எளிது.

திருச்சிற்றம்பலம்

1) புவம்வளிகனல் புனல்புவிகலை புரைமறைதிரி குணம்அமர்நெறி
திவமலிதரு சுரர்முதலியர் திகழ்தரும்உயிர் அவைஅவைதம
பவமலிதொழி லதுநினைவொடு பதுமனன்மல ரதுமருவிய
சிவனதுசிவ புரம்நினைபவர் செழுநிலனினில் நிலைபெறுவரே.

என்பதிலே பதுமத்தில் வாழும் பிரமனுடைய இருதயகமலத்தில் மருவியவன் சிவன்; என்றுணர்த்தியதுணர்க. [பதுமன்–பரமன்]

2) மலைபலவளர் தருபுவியிடை மறைதருவழி மலிமனிதர்கள்
நிலைமலிசுரர் முதல்உலகுகள் நிலைபெறுவகை நினைவொடுமிகும்
அலைகடல்நடு வறிதுயில்அமர் அரியுருவியல் பரன்உறைபதி
சிலைமலிமதிள் சிலபுரம்நினை பவர்திருமகளொடு திகழ்வரே.

என்பதில், திருமாலின் உருவாயிருந்து காத்தல் கூறியுளது.

3) பழுதிலகடல் புடைதழுவிய படிமுதலிய உலகுகள்மலி
குழுவியசுரர் பிறர்மனிதர்கள் குலமலிதரும் உயிரவையவை
முழுவதும்அழி வகைநினைவொடு முதலுருவியல் பரனுறைபதி
செழுமணியணி சிவபுரநகர் தொழுமவர்புகழ் மிகுமுலகிலே.

என்றதில் உருத்திரனாகி உலகெலாம் ஒடுக்கும் சிவன்எனல் அறிக.

4) நறைமலிதரும் அளறொடுமுகை நகுமலர்புகை மிகுவளர்ஒளி
நிறைபுனல்கொடு தனைநினைவொடு நியதமும்வழிபடும் அடியவர்
குறைவிலபதம் அணைதரவருள் குணம்உடையிறை உறைவனபதி
சிறைபுனல்அமர் சிவபுரமது நினைபவர்செய மகள்தலைவரே.

என்றதில் கிரியையாளர்க்குரிய மகேசுரனாகிய சிவத்தை உணர்த்தியதுணர்க.

5) சினமலிஅறு பகைமிகுபொறி சிதைதருவகை வளிநிறுவிய
மனன்உணர்வொடு மலர்மிசையெழு தருபொருள்நிய
தமும்உணர்பவர்
தனதெழில்உரு வதுகொடுஅடை தகுபரன்உறை வதுநகர்மதிள்
கனமருவிய சிவபுரநினை பவர்கலைமகள் தரநிகழ்வரே.

என்றதில், கிரியாவான்களுக்கும் போகவான்களுக்கும் உரிய சதாசிவத்தை உணர்த்தியவாறறிக.

இவற்றால், சிவமே ஏனைய மூர்த்திகளை அதிட்டித்து அவரவர் வழிபாட்டிற்கும் பக்குவத்திற்கும் ஏற்ப நின்று அருள் செய்தலும், திரிமூர்த்திகள் சிவத்தின் அம்சமே அன்றி வேறல்லாராதலும், அம்மூவர்க்கும் முதல்வன் பிரமசிவன் என்பதும், அதனால் அவன் சதுரன் (–நாலாமவன்) ஆதலும் நன்கு விளங்கும். 'மூவண்ணல் முத்தொழில் செய்ய வாளாமே வண்ணல்' என்றார் பரஞ்சோதிமா முனிவர்.

'செத்துச் செத்து' 'நூறுகோடி' 'வாது செய்து' 'கூவலாமை' 'தாயினும் நல்ல சங்கரன்' 'சிவனாகித்' 'குற்றமொன்று' என்பன முதலிய தேவாரப் பாடல்களை இங்குணர்க.

(தொடர்ச்சி 304-ம் பக்கம்)

சிவாயமலை

(இரத்னகிரி - வாட்போக்கி)

மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்கு
ஊறிஊறி உருகுமென் னுள்ளமே — திருநாவுக்கரசர்.

காலையில் கடம்பந்துறை கோயிலை வழிபட்டவர்கள் கடும் பகலில் வாட்போக்கியை வணங்க வேண்டும். மாலையில் திரு ஈங்கோய் மலையைத் தரிசிக்க வேண்டும் என்பது மக்களால் பண்டுதொட்டே போற்றப்பெற்று வருகிறது. இதனுல் "காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திருவேங்கிநாதர்" என்ற பழமொழியும் வழங்குகிறது. சிவாயமலை அல்லது ஐயர்மலை என்று இப்போது வழங்குவதே வாட்போக்கி என்ற பாடல் பெற்ற சிவத்தலம். இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து மணப்பாறைக்குச் செல்லும் சாலையில் ஆறுகல் தொலைவிலுள்ளது. பஸ் மூலமாக இவ்வூரை யடையலாம். தங்குவதற்கு நால்வர் குருபூசை மடம் என்ற ஒன்றிருக்கின்றது.

சிவாயமலை, ஐவர்மலை, இரத்தினகிரி, இரத்தினுசலம், இரத்தினவெற்பு, மணிகிரி, வாட்போக்கி முதலிய பெயர்கள் இத் தலத்திற்கு உண்டு. ஓம் என்னும் பிரணவ எழுத்தைப் போலும் திருவைந்தெழுத்தைப் போலும் படிகளும் பிரகாரங்களும் அமைந்திருப்பதால் சிவாயமலை என்ற பெயர் ஏற்பட்டது. மலையில் ஒருபுறம் கீழே சமண முனிவர்கள்

"திருக்கோயில்" மாலை 2, மணி 6 ல் வெளிவந்துள்ள இக்கட்டுரை சென்னை அரசாங்க அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர் அனுமதியுடன் பிரசுரிக்கப் பெற்றது.

படுக்கைகள் கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பஞ்ச பாண்டவர்மலை அல்லது ஐவர்மலை என்று வழங்கி, இப்போது ஐயர் மலை என்றே மக்கள் அழைக்கின்றனர். ஆரிய மன்னன் ஒருவனுக்கு இறைவன் இரத்தினம் கொடுத்த காரணத்தால் இரத்தின கிரி முதலிய பெயர்களும், ஆரிய மன்னன் பெருமான் முடிமீது வாளை விசித் தழும்பு உண்டாக்கியதால் வாள்போக்கி என்னும் பெயரும் வழங்கலாயின. கல்வெட்டுக்களில் திருமாணிக்கமலை என்ற பெயர் குறிக்கப்படுகிறது.

இரத்தினகிரி என்ற மலை வெகு செங்குத்தாய் வானுற நிமிர்ந்து நிற்கும் காட்சி வெகு தொலைவு வரையில் தெரிகிறது. அதன் மேல்கோயில் அமைந்திருப்பது ஒரு கோட்டைபோல் தோன்றும். மலையடிவாரத்தில் ஊரில் திருக்குளம் இருக்கிறது. படிகள் ஏறும் இடத்தில் பெரிய மண்டபம் இருக்கிறது. அதில் கருப்பண்ணர், வைர மேகப்பெருமாள், கோடங்கி நாயக்கர் இவர்கள் சந்நிதிகள் உள்ளன. மலையின் உயரம் 1178 அடி சுமார் 1000 படிகள் ஏறி உச்சியை அடையவேண்டும்.

அடிவாரத்திலிருந்து மலையேறும் இடத்தில் முதலில் ஒரு பெரும் உருண்டைப்பாறையின் மேல்பாகத்தில் ஒரு விநாயகர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விநாயகருக்குப் பூசை செய்தால் மழை பெய்யும் என்று சொல்லப்படுகிறது. கொஞ்சம் மேலே போன்னிடுர்பாறை என்ற பாறை இருக்கிறது. மேலே மலை யேறிச் சென்றால் சத்தமாதர் கோயில் இருக்கிறது. அது பெரும் மலைப் பாறைப் பிளவுக்கிடையில் உள்ளது. அப் பாறைகளின் இரு பகுதிகளையும் ஒன்று சேர்த்தால் நன்றாக இசைந்துவிடும். இதற்குப் பக்கத்தில் வசந்த மண்டபம் இருக்கிறது. மலை உச்சியை அடைவதற்குச் சற்று கீழே அம்பாள்கோயில் கிழக்கு நோக்கி இருக்கிறது. அதற்கு முன்னால் விநாயகர் சன்னிதியிருக்கிறது. அம்மன் கோயில் உள்ளே ஒரு பிரகாரம் உண்டு. வெளியில் தலவிருட்சமான வேப்பமரம் இருக்கிறது. அம்பிகைக் கோயிலிலிருந்து சுமார் 70 படிகள் ஏறிச் சென்றால் சுவாமி கோயிலை அடையலாம். மேல் பிரகார மண்டபம் வட்டமாக இருக்கிறது. அதை ஓங்கார மண்டபம் என்கின்றனர். சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. சுவாமி சந்நிதிக்குக் கீழே

ஒரு பிரகாரமும், மேலே ஒரு பிரகாரமும் சங்குச்சுழிபோல் அமைந்திருக்கின்றது. மேல் பிரகாரத்தில் விநாயகர், முருகன், வைரமேகப் பெருமாள், நடராஜர், ஆரிய மன்னன் முதலியோர் சந்நிதிகள் இருக்கின்றன. கீழ்ப்பிரகாரத்தில் அறுபத்துமூவர் எழுந்தருளியுள்ளனர்.

மலைமேல் வீற்றிருக்கும் பெருமானுக்கு இரத்தினகிரீசர், வாட்போக்கிநாதர், இராசலிங்கம், முடித்தழும்பர், மலைக்கொழுந்தீசர், சொக்கர் முதலிய திருநாமங்கள் உண்டு. இறைவியின் திருநாமம் சுரும்பார்குழலி என்பது. கல்வெட்டுக்களில் பெருமானுக்கு திருமாணிக்கமலை உடைய நாயனர், திருமாணிக்கமகாதேவர் என்றும், தேவிக்கு ஹரலட்சேஸ்வரி என்றும் பெயர்கள் காணப்படுகின்றன.

இத்தலத்தின் தீர்த்தம் காவிரி. ஆறு கல் தொலைவிலுள்ள குளித்தலையிலிருந்து நாள்தோறும் ஐந்து பாண்டாரங்களும் ஒரு வைணவ அந்தணரும் குடங்களில் காவிரி நீரைக் கொண்டு வருகின்றனர். அதையே மலைமேல் மூர்த்திகளுக்கு திருமஞ்சன நீராகப் பயன்படுத்துகின்றனர். இம்மலையைச் சுற்றி சிவாய தீர்த்தம், இந்திர தீர்த்தம், வாயு தீர்த்தம், நாக தீர்த்தம், சூரிய தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், உரோமச தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், துர்க்கா தீர்த்தம் என்ற ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. ஊர் நடுவேயுள்ள தெப்பக்குளமே சிவாய தீர்த்தம் அல்லது பஞ்சாட்சரத் தீர்த்தம் என்பது. மலைமேல் சுனைகளும் இருக்கின்றன.

ஆரிய மன்னன் ஒருவனுடைய மணிமுடி மறைந்துவிட்டது. நல்ல மணியைத் தேடி இப்பதியையடைந்தான். இறைவன் ஒரு அந்தணன்போல் தோன்றி ஒரு தொட்டியைக் காட்டி அதில் காவிரி நீரை நிறைக்கச் சொன்னன். எவ்வளவு நீரைக் கொட்டியும் தொட்டி நிறையவில்லை. கோபம் கொண்ட மன்னன் அந்தணன் முடியில் வாளால் வெட்ட அவன் மறைந்தான். அவ்வெட்டு சிவலிங்கத்தின் மீது பட்டுத் தழும்பு உண்டாயிற்று. அரசன் வாளைப் போக்கித் தன் முடியில் வாளின் தழும்பு ஏற்படச் செய்ததால் தலத்திற்கு வாட்போக்கி யென்றும்; பெருமானுக்கு முடித்தழும்பர் என்றும் பெயர்கள் வந்தன,

காஞ்சிப்பதியிலிருந்த ஆயர்குலத்தினர் ஒருவர் தன் தங்கைக்கும் மைத்துனனுக்கும் குழந்தை பிறந்தால் தன் தலையைத் தருவதாக இத்தலத்திறைவன்முன் உறுதி பூண்டார். அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. ஆயரும் உறுதி கூறிய வண்ணமே இத்தலத்தில் 'தன் தலையைப் பலியாகக் கொடுத்தார். அவரையே இப்போது வைரமேகப் பெருமாள் என்று மக்கள் வழிபடுகின்றனர். அவர் உருவம் மலைமேலும் மலையடிவாரத்திலும் இருக்கிறது. மலைமேல் அவர் முன்பு துப்பாக்கிகளும் இருக்கின்றன. அவரே மலைக்குக் காவல் தெய்வமாக மக்கள் கருதுகின்றனர்.

ஒரு காலத்தில் 11 வணிகர்கள் தாங்கள் வாணிகம் செய்து வந்த தொகையை இங்கு கொண்டு வந்து பதினொரு பிரிவாகப் பிரித்தார்கள். 12 பங்குகள் காணப்பட்டன. பலமுறை செய்தும் அவ்வாறே காணப்பட்டது. இறைவன் மனித உருவில் தோன்றி தனக்கு ஒரு பங்கு கொடுத்தால் பிரித்துக் கொடுப்பதாகச் சொல்ல, வணிகர்களும் இசைந்தனர். இறைவன் பிரித்துக் கொடுத்து ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மறைந்தனர். அது முதல் அவ்வகுப்பினர் பன்னிரண்டாஞ் செட்டியார்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

அபிஷேகத்திற்குக் கொண்டுவந்த பால்குடத்தைக் காகம் கவிழ்க்க, அது எரிந்து போய்விட்டது. ஒரு எல்லை உயரத்திற்கு மேல் இம்மலையருகே காகம் பறப்பதில்லை. ஆதலின் 'காகம் அணுகாமலை' என்று இம்மலைக்குப் பெயர்.

இப் பதியில் சித்திரை மாதம் பெருவிழா நடைபெறுகிறது. தைப்பூசத்தில் கடம்பந்துறைக்குச் சென்று சுவாமி காவிரியில் தீர்த்தம் கொடுத்துவிட்டு மறுநாள் திரும்பி வருகிறது. பங்குனி உத்திரத்தில் குளித்தலையிலுள்ள தெப்பக் குளத்திற்குத் தெப்ப விழாவிற்காக இங்கிருந்து எழுந்தருளி காட்சி கொடுத்துவிட்டு மறுநாள் திரும்புவதுண்டு.

திருநாவுக்கரசர் பத்துப் பாடல்களையுடைய திருக்குறுந்தொகைப்பதிகம் ஒன்றருளியுள்ளனர். ஒவ்வொரு பாடலிலும்,

எமதூதர் வருமுன்னர் வாட்போக்கியாரை வணங்குங்கள் என அறிவுரை கூறுகின்றார். 'பார் முழுதாய்' என்று தொடங்கும் திருத்தாண்டகத்தில் "வாட்போக்கி அம்மானை எம்மானென்று" கூறியிருக்கிறார். அருணகிரி நாதர் மூன்று திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். 'ஆசைநாலு' என்று தொடங்கும் பாடலில் 'காசி இராமசுரம் இரத்தினகிரி சர்ப்பகிரி' என்று சொல்கிறார். மற்ற இரண்டு பாடல்களிலும் இரத்தின வெற்பு, மணிக்கிரி என்று கூறியிருக்கிறார். திருவாரூர் - வைத்திய நாத தேசிகர் முதலியோரால் இயற்றப்பெற்ற 'திருவாட் போக்கிப் புராணம்' என்ற நூலில் நைமிசச் சருக்கம் முதல் பொன்னிடும் பாறைச் சருக்கம் வரையில் 14 சருக்கங்களில் இத்தலமகிமை கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர் பெயர் தெரியாத இரத்தினகிரி உலா என்ற நூலும் இத்தலத்தைப் பற்றியதே. அது 408 கண்ணிகளையுடையது. அதில் மலைச்சிறப்பு, மூர்த்திப்பெருமை, பிறசெய்திகள் சொல்லப்படுகின்றன. திரிசிரபுரம் — மகாவித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வாட்போக்கிக் கலம்பகம் என்ற அரியநூலை இயற்றியுள்ளார்கள். அது 100 பாடல்களை யுடையது. அதில் ஒரு பாடல் பின்வருமாறு:—

ஆனவனு காதவனென் றன்புடையார் பாலாயா
　　னனவனு காதவனே நானுக உட்குறிக்குங்
கோனவன்மு னுகியல்லாக் கோமான்மா ணிக்கமலை
　　வானவன்சீர் பாடாதார் வாயென்ன வாயே
மலைக்கொழுந்தென் றுரையாதார் வாயென்ன வாயே.

வாட்போக்கி மலைக்குத் தெற்கே ஒன்றரை கல்தொலைவில் சிவாயம் என்ற ஊர் இருக்கிறது. கோபுரமுடைய பெரிய பழைய சிவன்கோயில் அங்கு இருக்கிறது. சுவாமி பெயர் சிவபுரீசர்; அம்பிகை பெயர் பெரியநாயகி.

இரத்தினகிரியிலும், சிவாயம் கோயிலிலும் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இரத்தினகிரி மலைப்படிக்கட்டு களிலும், அம்மன்சுவாமி கோயில்களின் கர்ப்பக்கிரகச் சுவர் களிலும், விநாயகர் கர்ப்பக்கிரகச் சுவர்களிலும், அம்மன் பிர காரச்சுவர் வெளிப்புறத்திலும், மலைமேலுள்ள ஒரு பாறையிலும்

கல்லெழுத்துக்கள் காணப்படுகின்றன. இராஜகம்பிர வள நாட்டுக் குறுநாகை நாட்டினுள்ள திருமாணிக்கமலை, வாள் போக்கி என்று குறிக்கின்றன. இறைவனை திருமாணிக்கமலை உடைய தம்பிரானார், வாட்போக்கிமலை மகாதேவர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது. படிக்கட்டுகள், மண்டபங்கள் முதலிய திருப்பணிகளுக்கும், தை, மாசித் திருவிழாக்களுக்கும், மார்கழித் திருவாதிரைக்கும், காவிரியிலிருந்து திருமஞ்சன நீர் கொண்டு வருவதற்கும், எழு நூற்றுவர் மடத்தில் தேவரடியார், சிவயோகிகள், தபசிகள் முதலியவர்களுக்கு உணவளிக்கவும், திருப்பள்ளியறை நம்பிராட்டியார், திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார், தட்சிணாமூர்த்தி இவர்களின் உருவச்சிலைகள் எடுப்பிக்கவும் பொன் நிலம் முதலியவைகள் வழங்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன. சோழ மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், ஹொய்சன அரசர்கள் விஜயநகர வேந்தர்கள் முதலிய பலர் ஆட்சிக்காலத்திய கல்வெட்டுக்கள் அங்கே காணப்படுபவை.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

— அருணகிரிநாதர்.

THIRUKKOVAIYAR OR LOVE'S PROGRESS
BY
SAINT MANICKAVASAGAR

Professor Thiru G. Subramania Pillai Avergal, M. A., B. L.,
Annamalainagar.

(மலர் 11, இதழ் 4-ன் தொடர்ச்சி)

21. உற்றதுரைத்தல்

கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்றாள்
ஆம்பொற் றடமலர் சூடுமென் னுற்ற லகற்றியதே.

[The Hero relates to his Companion: Accosted by his friend, the Hero relates to him just what has happened, how a beautiful young girl has charmed him and how he has madly fallen in love with her.]

"As a peacock, that chameleons could scare,
Would snatch by the hood easily and tear
A serpent which an elephant could kill,
The drum-shaped waist of a doe-eyed girl, still
Wearing out under the onerous weight
Of bulging breasts, has removed my full might
By which I on my head would ever wear
Thillai Sivan's flower-like feet so fair!"

(Spiritual Allegory - The Soul tells the Mind of its sufferings)

(to be continued)

திருமந்திரம்

(தருமையாதீன வித்துவான் - முத்து. சு. மாணிக்கவாசகர்,
ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர்)

திருமுறை பன்னிரண்டனுள் திருமந்திரமும் பதினொன்றாந் திருமுறையும் எண்ணற்ற பிழைகளுடன் இருக்கின்றன. அவற்றைத் திருத்தஞ்செய்து நல்ல பதிப்பாக வெளியிடுதல் சைவர்க்குள்ள தலையான கடமைகளுள் தலையானது. "சித்தாந்தம்" ஆசிரியரும், சிவபத்தி முதலியவற்றில் சாலச் சிறந்தவரும், என்பால் மெய்யன்பும் நட்பும் உடையவருமாகிய திரு. முருகவேள், எம். ஏ,. எம். ஓ. எல். அவர்கள், நேற்று வேலூரில், திருமந்திரங்களில் உள்ள பாடபேதங்களைக் குறித்துத் தொடர்பாகக் கட்டுரை எழுதிவரும் வண்ணம் தூண்டினார்கள். அவ்வாறே செய்ய இசைந்து முதலில் இதனை எழுதினேன். அறிஞருலகம் இதனது உண்மையை உணர்ந்து ஆவனசெய்க.

இப்போதுள்ள திருமந்திரப் பதிப்புக்கள் பற்பலவாகும். அவற்றுள் பாடபேதங்கள் மிகக்கொண்டு விளங்குவது சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பு. அப்பதிப்புள்ளும் ஒன்றே அத்தகையது. திருவாளர் - மு. அருணாசலம், எம். ஏ. அவர்கள், புகழுடல் பெற்ற ம. பா. அவர்களது விருப்பத்திற்கு இசைந்து, பல ஏடுகளை ஒருங்குவைத்து நோக்கிச் செய்த ஆராய்ச்சி வெளியிடு அது. அதை மட்டும் வைத்துக்கொண்டு நல்லறிவாளர் பலர் ஒருங்குகூடித் தக்கபாடம் இவை என வரையறுத்து ஒழுங்கான பதிப்பொன்றை வெளியிடல் இன்றியமையாதது. அதற்கு இக்கட்டுரை ஒரு தூண்டுதல் ஆகும் என்று கருதித் துணிந்தெழுதுகின்றேன்.

திருமந்திரத்தில் இன்றைய பாடபேதங்களின் நிலைமையை அறியச் சிற்சில எடுத்துக் காட்டுக்களால் விளக்குவதே இம் முதற் கட்டுரை.

"சித்தாந்தம்" மார்ச் 1960-ல் வெளிவந்துள்ள இக்கட்டுரை
ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப் பெற்றது.

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடும் தானே.

என்றதில் அங்கே என்றது 'அங்கி' என்றிருந்து கெட்டது. அங்கி — நெருப்பு. மூலாக்கினியைக் குறிப்பது அது.

'குருநிந்தை' என்னும் தலைப்பில் மூன்ருவது பாடலாக
பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியமும் ஈது சதாநந்தி ஆணையே.

என்று உளது. இதில், குருவைப் பத்தினி பத்தர் என்று குறித்தல் பொருந்துமோ? பத்தினி பத்தர் என்றதன் பொருள் என்ன? பெண்டாட்டி தொண்டர் என்னும் பொருளினும் வேறு பொருள் உண்டோ? பெண்டாட்டி தொண்டர் சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்க்கு எய்தும் கேடுகளைச் சொல்லவோ இப்பாடல் தோன்றியது? குருலட்சணங்களுள் பத்தினி பத்தியும் அடங்குமோ? ஒரு சிறிதும் ஆராயாமலேயே இது குற்றம் என்று துணிதல் சிற்றறிவினுர்க்கும் இயலும் அன்ருே? இப்பாடத்தைக் கொண்டுள்ள பதிப்புக்களும் குறிப்புரை முதலியனவும் ஏனையிடங்களில் எப்படி இருக்கும் என்று கருதியுணர்தல் எளிதன்ருே?

'சத்தினிபாதர்கள் தத்துவ ஞானிகள் என்று இருந்து இந்நிலையை அடைந்துளது இது. மோனை நயம் முதலியனவும் இதன் உண்மையை நிலை நாட்டும்.

பா. 1923. பக்கம் 756-இல் 'ஆண் பெண் கலக்கும் காலத்திலும் விந்து வெளிப்படாமல் போகம் செய்வதுதான் சிவயோகம்' என்று உரையெழுதினுர் ஒருவர். அதைக் கழகப் பதிப்பிற் காணலாம். இது சிவயோகம் ஆயின், இதைப்பெற வேண்டி மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கல் ஏன்? தோத்திரம் ஏன்? சாத்திரம் ஏன்? கோயில் ஏன்? மடம் ஏன்? குரு ஏன்? சிடர் ஏன்? பத்தினியும் அவள் பத்தனும் ஆதலே

போதாதோ ? இப்போகம் நாய் நரி முதலியவற்றிற்கும் உண்டா? இல்லையா ? இது சிவயோகம் ஆகுமோ ?

'மிகையில்லை' (1304) என்றது 'வினையில்லை' என்று மாறிற்று. 'ஆசற்ற சற்குரு அப்பரமாமே' (1574) என்றதில் 'அம்பலம் ஆமே, என்று உளது. 'அப்பரம் என்றதே அங்கு இருத்தற்குரியது. அதற்குக் கண்ணிற்கண்ட குருவே 'காணாத சிவம் என்னும் பொருள் ஆகும். சிவகதியே கதி மற்றுள்ள எல்லாம் 'பகவதி' (1536) என்பதில் பகவதி வந்து காட்சி தருவது சைவர் செய்த தவகதி போலும்.

"சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆகுதல்
சைவம் தனைஅறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம்தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவம் சிவாநந்தம் சாயுச் சியமே"

என்பதில் மூன்றாவதடியில், 'அன்றி' என்று இருந்தது. அது 'தன்னை' எனக் கெட்டது. அக்கேடு சிவத்தைச், சாராமல் நீங்குதல் சைவம் என்று பொருள் பயக்கும் கேட்டுக்குக் காரணம் ஆயிற்று. சிவச்சார்பு இல்லாதது சைவம் ஆமோ? 'சிவம் அன்றி' என்னும் பாடம் உண்டு என்று அப்பதிப்பே காட்டுகின்றது. 'சைவம் பசுபாசம் சாராது நீவுதல்' என்று பிறிதொரு பாடமும் உள்ளது.

(தொடரும்)

(முன் 294-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொருளை உட்கொண்டு நோக்கின், பின்வரும் பாடலின் பொருள் நன்றாகப் புலப்படும்.

அங்கட் கமலத் தலர்கமல மேயீரும் நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரும் நீரேபோலும்
திங்கட் சடையீரும் தில்லைவனத் துள்ளீரும் நீரேபோலும்.

குறிப்பு:- அம் - அழகு. கள் - தேன், கமலம் - உந்தித்தாமரை, கமலம், அத்தாமரையில் தோன்றிய தாமரை. அலர் கமலம் - அலர்ந்த மலர்மலர், மேயீர் - மேவினீர். வெம் கண் சுடிகை - வெய்ய கண்ணையும் உச்சியையும் உடைய (அரவு). விட அரவு - நச்சுப்பாம்பு, அரவில் மேயீர் - அராவணையில் மேவினீர், திங்கள் பிறை, 'சடையீர்':- உருத்திரனைக் குறித்த முன்னிலை, தில்லைவனத்துள்ளீர்:- சிவனைக் குறித்தது (சதுரன்), அத்திரிமூர்த்திகளும் நீரே என்றது, போலும் என்பன அசை.

(தொடரும்)

நகைச் சுவை (HUMOUR)

வித்துவான். திரு. பொன். முருகையன் அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர் செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

நம்முடைய உடம்பில் தோன்றும் மெய்ப்பாடுகள் எட்டென்று தொல்காப்பியனாரும் செயிற்றியனாரும் இலக்கணம் வகுத்தனர். அவை–நகைச்சுவை, அழுகைச்சுவை, இளிவரல் சுவை, மருட்கைச்சுவை, அச்சச்சுவை, பெருமிதச்சுவை, உவகைச் சுவை, வெகுளிச் சுவை என்பன. இவற்றையே வட நூலார் நவரஸம் என்று பாகுபாடு செய்து, சாந்தரஸம், சோக ரஸம் முதலிய ரஸங்களைச் சிறப்பித்தனர். பாதரஸத்தையும், மிளகு ரசத்தையும் ஏன் சேர்க்கவில்லை என்று ஒருவன் கேட்டால் அது நகைச்சுவையே. இந்த எட்டு மெய்ப்பாடுகளில் தலை சிறந்தது நகைச்சுவையாகும். நாடகங்களிலும் உலகமக்கள் பேச்சுக்களிலும் பெரிதும் பயின்று வருவது இதுவேயாகும்.

நகைச்சுவை தோன்றும் இடமும் காலமும்

நகைச்சுவை எப்பொழுது தோன்றும் என்று கேட்டால் பணக்கார வீட்டுப் பெண்டிர்கள் அலங்கரிப்பைப் பார்த்தால் மற்ற பெண்டிர்களுக்கு நகைச்சுவை தோன்றும் என்றும், எந்த இடத்தில் தோன்றும் என்று கேட்டால் திருவிழாக் காலங்களிலும் கடைவீதிகளிலும் என்று விடையிறுப்பர். இது நகை-ஆபரணச் சுவை.

ஆனால் நகைச் சுவை தோன்றும் இடங்கள் நான்கு என தொல்காப்பியர் வரையறை செய்கின்றார்.

"எள்ளல் இளமை பேதமை மடன் என்று
உள்ளப் பட்ட நகை நான்கென்ப" (தொல். பொருள் 248)

ஒருவன் மற்றொருவனைப் பரிகாசம் செய்தற்கண்ணும் இளமை காரணமாகவும், பேதமை காரணமாகவும், அறிவின்மையாலும்

என நகைச்சுவை தோன்றும் இடங்கள் நான்கு என்பது தொல்காப்பியர் கருத்து. இவற்றையே செயிற்றியனுர் சற்று விரிவாகக் கூறுகின்ருர். இருப்பினும் தொல்காப்பியர் கூறிய நான்கு இடங்களும் அதனுள் அடங்கும்.

எள்ளல்- "நகையிவை தோன்றும் இடம் யாதெனினே
முடவர் செல்லும் செலவின் கண்ணும்
மடமை- மடவோர் சொல்லும் சொல்லின் கண்ணும்
பிதற்றிக்கூறும் பித்தர் கண்ணும்
இளமை- குழவி கூறும் மழலைக் கண்ணும்
பேதமை- மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலிவின் கண்ணும்
கல்லார் கூறும் கல்விக் கண்ணும்
களியின் கண்ணும் காவாலி கண்ணும்
தெளிவிலார் ஒழுகும் கடவுளர் கண்ணும்
ஆரியர் கூறும் தமிழின் கண்ணும்
கூனர் கண்ணும் குருடர் கண்ணும்
ஊமர் கண்ணும் செவிடர் கண்ணும்
தோன்றும் என்ப துணிந்திசினேரே." (செயிற்றியம்)

செயிற்றியனுர் கூறும் இவ்விடங்களெல்லாம் நாம் உலகத்தில் நாள் தோறும் கண்கூடாகப் பார்த்தும் அனுபவித்தும் வருவதேயாகும். முடவர், கூனர், குருடர் முதலியோரது நடையும் செயலும் நமக்குச் சிரிப்பினை உண்டாக்குகின்றன. குழந்தைகள் பேசும் பேச்சு நகையினை உண்டாக்குகின்றது. ஊமர் செயல் நமக்கு ஊமரை (Humour-நகை) உண்டாக்குகின்றது.

இலவம் பஞ்சு போன்ற உடலை உடையவன் பிறனெருவனைப் பார்த்து "விட்டேனு பார்" என வஞ்சினங் கூறுதலும், சிறந்த வலிமையுடையான் ஒருவன் "என்னுல் என்ன முடியும்" என்று கூறுதலும் நமக்கு நகையையே உண்டாக்குகின்றன. இவையிரண்டும் மெலியோன் கூறும் வலி, வலியோன் கூறும் மெலிவு என்பவை யாகும்.

கல்லார் கூறும் கல்வி

மொழியினை நன்கு கல்லாதவர் கூறும் கல்வி நகையினையே உண்டாக்கும். சான்று:-

"ஒரு உயர்நிலைப்பள்ளி. தீபாவளி விடுமுறை கழித்து பள்ளி திறந்த நாள். அன்று பாடம் நடைபெறுகிறது. ஒரு வகுப்பில் மொழிபெயர்ப்பு (Translation) நடைபெறுகிறது. தீபாவளி அனுபவங்களைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதித்தருமாறு ஆசிரியர் பணித்தார். எல்லா மாணவர்களும் எழுதிக் கொடுத்தனர். ஆசிரியர்விடைத்தாளைப் படித்துப் பார்த்தார். அதில் ஒருவன் எழுதியிருந்தான்.

My mother Shoot palagarams
in the good oil for Dipavali.

என்னுடைய தாயார் தீபாவளிப் பலகாரங்களை
நல்லெண்ணெய்யில் தயாரித்தாள். (சுட்டாள்)

Shoot–சுடு.

ஆசிரியர் இதனைப் படித்தவுடனேயே வகுப்பில் சிரிப்பொலி கேட்டது. கல்லார் கூறும் கல்வி காரணமாய நகைச்சுவை.

இனி ஆரியர் கூறும் தமிழ். வடமொழி தமிழ் நாட்டில் பரவிய காரணத்தால் செயிற்றியனுர் இவ்வாறு இலக்கணம் வகுத்தார். பொதுவாக பிறநாட்டார் கூறும் தமிழ் என்றே சொல்லலாம். பிறநாட்டார் கூறும் தமிழும் நமக்கு நகைச் சுவையை உண்டாக்கும். இதற்குச் சான்று "வெள்ளைக்கார துரையொருவர் சென்னை நகரைக்காண வந்தார். சென்னை நகரம் பல பேட்டைகளாகப் (Pet) பிரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவர் கேட்டறிந்தார். செண்டிரல் ரயில் நிலையத்தில் வந்திறங்கினுர். ரிக்ஷா வண்டி யொன்றை அமர்த்திக் கொண்டார். ரிக்ஷா ஓட்டி வண்டியை விரைவாக இழுத்துச் சென்றான். துரை ரிக்ஷா ஓட்டியை அழைத்தார். பலமுறை அவர் கூப்பிட்டும் அவன் வண்டியை இழுத்துக் கொண்டே சென்றான். காரணம் அவன் ஒரு செவிடன். கடைசியாக அந்தத் துரை தன் கையில் உள்ள குடையை நீட்டி "இது என்ன பேட்டை" என்று அரை குறை பாஷையில் கேட்டார். ரிக்ஷாக்காரன் வண்டியை இழுத்துக் கொண்டே "சாமி, குத்தாதிங்க இது தோள்பட்டை" என்று நிதானமாகப் பதிலளித்தான். இச்செயல் கண்டோர்க்கு நகையினை உண்டாக்கிற்று.

பேதமை காரணமாக வந்த நகைச்சுவை

ஒரு நாட்டுப் புறத்தான். ஓரளவு படித்தவன். அன்றைய தினத்தாளைப் படித்தான். மளிகைக் கடைக்குச் சென்று "நல்லெண்ணெய் சேர்என்ன விலை" என்று கேட்டான். 'பத்தணு' என்று கடைக்காரன் பதிலளித்தான். நாட்டுப் புறத்தான் முகத்தில் கவலைக் குறிகள் தோன்றியது. தன் கையில் உள்ள தினத்தாளை கடைக்காரனிடம் காட்டினுன். காட்டிப் பின்வருமாறு சொன்னுன் "நம்பநாட்டு எண்ணெய்யை அமேரிக்காவுக்கு அனுப்புறு ஏன் இம்புட்டு விலை விக்காது" என்று கத்தினுன். அந்தத் தினத்தாளில் கண்ட செய்தி.

"இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு நல்லெண்ணத் தூது கோஷ்டி தடித்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது." பேதமை காரணமாக நல்லெண்ணம்-என்பதை நல்லெண்ணெய் என்று படித்து விட்டான் நாட்டுப் புறத்தான். இது நகைப்புக்கு இடமளிக்கிறது.

கடைவிதிகளில் சோடா பானங்கள் விற்கப்படும் என்ற அறிக்கையை ஆங்கிலம் பேசும் ஒருவர் உச்சரிக்கும் போது பானங்கள் என்பதை "பனங்கீள்" என்றே உச்சரிக்கின்ருர். மதுவிலக்கு இருக்கும் இந்நாட்களில் இது பெருத்த தொல்லையைக் கொடுக்கும்.

எனவே நகைச் சுவை மக்களிடத்து அதிகமாகப் பழகுகின்றது. எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுக்கின்றது. இலக்கியங்களிலும் நாடகங்களிலும் பயிலப் படுகின்றது. நகைச்சுவை நாடகத்தின் உறுப்பு என மேலை நாட்டாசிரியரான அரிஸ்டாடில் கூறுகின்ருர்.

திருப்பராய்த்துறை

கந்த மாமலர்க் கொன்றை கமழ்சடை
வந்தபூம் புனல் வைத்தவர்
பைந்தண் மாதவிசூழ்ந்தீ பராய்த்துறை
அந்தமில்ல அடிகளே — திருஞானசம்பந்தர்.

போது தாதொடு கொண்டு புனைந்துடன்
தாத விழ்சடைச் சங்கரன் பாதத்துள்
வாதை தீர்க்களன் றேத்திப் பராய்த்துறைச்
சோதியானைத் தொழுதெழுந் துய்ம்மினே — திருநாவுக்கரசர்.

ஆற்றங்கரையிலிருக்கும் சிலபதிகளுக்கு துறை என்று முடியும் பெயர் உண்டு. திருமயிலாடுதுறை, திருக்கடம்பந் துறை, திருநெல்வாயிலரத்துறை முதலிய அத்தகையவை. திருப் பராய்த்துறை என்னும் பாடல் பெற்ற சிவத்தலம் காவிரியின் தென்கரையில் அமைந்திருக்கிறது. அது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருக்கிறது. திருப்பராய்த்துறை என்ற புகைவண்டி நிலயத்திலிருந்து அரை கல் தொலேவிலிருக்கிறது. இந்த இடத்தில் செல்லும் காவிரியை அகண்ட (அகன்ற) காவிரி என்பர். இங்கே ஆறு மிகவும் அகலமாய் இருப்பதால் அப் பெயர் ஏற்பட்டது. அப்பர் சுவாமிகள், "பரப்புநீர் வருகாவிரித் தென்கரைத் திருப்பராய்த்துறை" என்றும் "பரக்குநீர்ப் பொன்னி மன்னு பராய்த்துறை" என்றும் கூறியிருப்பது நோக் கத்தக்கது.

காவிரிக்கரையில் கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கோயில் திருப்பணி செய்யப் பட்டது. ஒன்றன்பின் ஒன்ருய் இருவாயில்களே இரண்டு கோபுரங்கள் அழகு செய்கின்றன. சிவபெருமான் சந்நிதி

"திருக்கோயில்" மார்ச் 1960-ல் வெளிவந்துள்ள இக்கட்டுரை சென்னே அரசாங்க அறநிலேய பாதுகாப்பு ஆணேயாளர் அனுமதியுடன் பிரசுரிக்கப் பெற்றது.

கிழக்குநோக்கி யிருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் விநாயகர், தண்டபாணி சந்நிதிகள் உள்ளன. அம்பாள் கோயில் கிழக்கு நோக்கி யிருக்கிறது. முதற் கோபுரத்தின் பக்கத்தில் பரலி யிலிருந்து கொண்டு வந்து எழுந்தருளச் செய்யப்பெற்ற பரலி விநாயகர் கோயில் இருக்கிறது.

இத்தலத்து இறைவன் திருப்பெயர்கள், திருப்பராய்த்துறை நாதர், தாருகவனேசுவரர் என்பன. தேவியின் திருநாமம் பொன் மயிலம்மை. இத்தலத்தின் தீர்த்தம் காவிரியே. தலவிருட்சம்— பராய்மரம். இது மேற்குப் பிரகாரத்தில் இருக்கிறது; பால் உள்ளது; தோல்நோயுள்ளவர்கள் அம்மரத்தின் இலையை அரைத்துப் பூசிக்கொண்டால் அது நீங்குமென்று சொல்லப் படுகிறது.

பராய் மரங்கள் நிறைந்த காடு தாருகாவனம். அங்கு தவம்செய்த முனிவர்கள் மமதை கொண்டனர். அதையடக்க எண்ணிய இறைவன் பிட்சாடனர் வேடங்கொண்டு முனிவர் களின் பத்தினிகளை மயக்கினர். முனிவர்கள் யாகம் செய்ய, அதில் தோன்றிய புலியை ஏவினர். சிவபெருமான் அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்துகொண்டார். மான் புறப் பட்டது; அதை இடக்கரத்தில் ஏந்தினர். பல அரவங்கள் தோன்றின; அவற்றை அணிகலன்களாகப் பூண்டனர். பூதப் படைகள் உண்டாயின; அவைகளைப் பூதகணங்களாகும்படி பணித்தனர். அவர்கள் ஏவிய யானையை உரித்துத் தோலைப் போர்த்திக் கொண்டனர். முனிவர்க்ள் வலியிழந்து குறையிரந்து மன்னிப்பு வேண்டினர்கள். இறைவன் அவர்களுக்குத் தாருகா வனேசுவரராகக் காட்சி யளித்தார். இதுவே தலபுராண வரலாறு.

இப்பதியில் ஐப்பசி மாதத்தில் துலா முழுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது. காவிரியில் நீராடப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர். வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடை பெறும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவன் மீது பதினொரு பாடல் களையுடைய பதிகம் ஒன்று அருளியுள்ளார். "பைந்தண்மாதவி

சூழ்ந்த பராய்த்துறை'','பறையும் சங்கும் ஒலிசெய் பராய்த்துறை' என்று கூறுகிறுர். இறைவன் திருமேனியின் அழகை விதந்தோதுகிறுர். திருநாவுக்கரசர் பத்துப் பாடல்களையுடைய ஒரு பதிகம் பாடியிருக்கின்றுர். பராய்த்துறை மேவிய பரமனைப் போற்றினுல் 'நம்வினை யுள்ளனவீடுமே' என்றும், பொருக்க நும் வினை போயறுங் காண்மினே' என்றும் சொல்கிறுர். அருணகிரி நாதர் ஒரு திருப்புகழ்ப் பாடலில் ''முதறிவுந்திய தீட்சை செப்பிய ஞானம் விளங்கிய மூர்த்தியற்புத மூவர் இலங்கு பராய்த்துறைப் பதிப்பெருமாளே'' என்று முடித்துக் கூறுகிறுர். மாணிக்கவாசகர்' ''பராய்த்துறை மேவிய பரனே போற்றி'' என்றும், ''தென் பராய்த்துறையாய் சிவலோகா'' என்றும் அருளியிருக்கிறுர். பட்டினத்தார் ஒரு பாடலில் ''எண்ணற்கரிய பராய்த்துறை'' என்று இயம்பியிருக்கிறுர்.

இக்கோயிலில் இருந்த பல கல்வெட்டுக்களுக்கு அரசாங்கத்தார் படியெடுத்து வைத்திருக்கின்றனர். அவை பழைய கோயிலில் இருந்தன. புதுத் திருப்பணியின்பின் அவை காணப் படவில்லை. கோயில் பிரகாரத்தில் இருக்கும் விநாயகர் கோயிற் சுவர்களில் மாத்திரம் சில கல்வெட்டுக்கள் இப்போதும் காணப்படுகின்றன. படியெடுத்து வைக்கப்பட்டிருக்கும் கல் வெட்டுக்களில் பெரும்பாலானவை இராஜகேசரி வர்மன் பரகேசரிவர்மன் இவர்கள் காலத்தவை என்று கூறுகின்றன. ஆராய்ச்சியாளர் அவை முதற்பராந்தக சோழனுக்கும் முதல் இராஜராஜ சோழனுக்கும் இடையே ஆட்சிசெய்த மன்னர்களின் காலத்தனவாக இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். இராஜராஜன் I, இராஜேந்திரன் I, மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், விஜயநகர வீரகம்பண்ண உடையார் II. கிருஷ்ணதேவ மகாராயர், விசுவநாத நாயக்கர் திருமலை நாயக்கரய்யன் இவர்கள் காலத்தில் ஏற்பட்டவை அக் கல்லெழுத்துக்கள். பெரும்பாலானவை விளக்கெரிக்க நெல், நிலம், ஆடு, பொன் முதலியவைகள் வழங்கியதை அறிவிக்கின்றன. கல்வெட்டுக்களில் கேரளாந்தக வளநாட்டு, இராஜ கம்பிர வளநாட்டு உறையூர்க் கூற்றத்திலுள்ள திருப்பராய்த் துறை என்று இவ்வூர் கூறப்படுகிறது. இறைவனைத் திருப்

பராய்த்துறைப் பெருமானடிகள், திருப்பராய்த்துறை உடைய நாயனுர், திருப்பராய்த்துறைத் தேவர் என்று குறிக்கின்றன. ஒரு கல்வெட்டில் சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்த தம்பிரானுர், பசும்பொன்னம்மை என்ற பெயர்களும், காணப்படுகின்றன. இராஜராஜன் I மாசிமகத் திருவிழாவில் ஒன்பது நாட் செலவுக்காக நிலம் விட்டது; இறைவன்பேருக்கு நிலம் விற்றுக்கொடுத்தது; பொன்னுல் திருமேகலே செய்தளித்தது; வணிகர்களுக்குக் குடியிருப்பு நிலம் வழங்கியது; திருமண்டபம் அமைத்தது; திருப்பள்ளித்தாமத்துக்கு (பூமாலேக்கு) அறுபது தாமரைப்பூக்கள் பறித்துக்கொண்டு வருபவர்களுக்கு நெல் கொடுத்தது; இன்னேரன்ன பிறஅரிய செய்திகளேத் தெரிவிக்கின்றன. ஒரு கல்வெட்டில் 'திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு புறத்து வேளார் மணவாட்டி நங்கை அல்லி அரசியார் திருவிளக்கினுக்குக் கொடுத்தபொன் முப்பதின் கழஞ்சு. (அதை மூவர் முட்டாமல் எரிக்க ஒப்புக்கொண்டனர்). இத்தர்மம் இரட்சிப்பாருடைய ஸ்ரீபாதம் என்தலே மேலன' என்று காண்பது அறஞ்செய்வோரின் பணிவைக் காட்டுகிறது. மற்ருெரு கல்வெட்டில் ஒருவன் பெயர் "விழித்துறங்கும் பெருமாள்" என்று கூறியிருப்பது "அறிதுயிலமர்ந்த பெருமாளே"க் குறிக்கும்.

சீதப்புனலும் வேதப்பொருளும்

வித்துவான் திருமதி. சு. விஜயசரஸ்வதி அவர்கள்;
தமிழாசிரியை, கோபாலபுரம் மகளிர் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

(மலர் 11 இதழ் 3-ன் தொடர்ச்சி)

திருவேணி நீராடலுக்குச் செல்லுபவர்கள் முதலில் கங்கை யாற்றில் நீராடிப் பின் யமுனையாறு வந்து கூடும் சங்கமத் திற்கு நீராட வருகின்றார்கள். இவ்வாற்றங் கரைகளுக்குச் செல்ல டாங்கா வண்டிகள் கிடைக்கின்றன. யமுனைக் கரைக்கு வந்தவுடன் படகுகள் தயாராகக் காத்திருக்கின்றன. அவற்றில் அரை அல்லது முக்கால் மைல் பிரயாணம் செய்தால் மூன் றாறுகள் கூடும் திரிவேணியை அடைகின்றோம். அரண் அமைத்தது போன்று படகுகளை ஒன்றோடொன்று கட்டி இணைத்து நட்டாற்றில் நிறுத்தி இருக்கின்றார்கள். மக்கள் படகுகளைப் பிடித்துக் கொண்டு நீரில் இறங்கி நீராடுகின்றனர். வெண்மணற் பரப்பில் தண்ணீர் விரைந்தோடும் சலசலப்பும், ஆரவாரமும் கல்மனக் கள்ளர்களின் கருத்தையும் மாற்றிக் கனிவுடன் பணியும் நிலையினைத் தூண்டுகின்றன.

இந்நீர்த்துறை கங்கை, யமுனை, கண்ணுக்குப் புலனாகாமல் ஓடுவதாகக் கருதப்படும் சரசுவதி ஆகிய மூன்றாறுகள் கூடு மிடம். சரசுவதி பூமியினுள் நுழைந்து மறைந்து போய்ப் பிரயாகையில் கங்கை யமுனை கூடுமிடத்தில் வந்து வெளிப் படுவதாகக் கூறுவர். மூன்றாறுகளின் சங்கமமாதலால் இத் துறைக்குத் திரிவேணி என்று பெயர் வந்தது. இவ்வாறுகளின் கலப்பை எளிதாக விளக்குவதற்கு மகளிர் போடும் சடையைக் குறிப்பிடுகின்றனர். மூன்று கற்றைகளாகப் பிரித்துக் கொண்டு மகளிர் சடையைப் பின்னுகின்றனர். அச்சடையில் கண்ணுக்குப் புலனாவது இரண்டும், கண்ணுக்குப் புலனாகாது மறைந்து உறைவது ஒன்றும் ஆகிய சடைக்கற்றைகள் மூன்று என்பதை

உணர்வோம். அது போலவே, கண்ணுக்குப் புலனுகும் ஆற்றையும் புலனுகா ஆற்றையும் கூட்டி இத்திரிவேணியை நமக்கு அறிமுக மாக்குகின்றனர். திருவாசகக் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது.

ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்ருனே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்.........

— மாணிக்கவாசகர்.

இங்கே ஆண்டு தோறும் மாசி மாதத்தில் மாகமேளா என்னும் புனிதமான பெருநீராட்டு விழா நடைபெறும். 12 ஆண்டுகளுக்கொரு முறை கும்பமேளா என்னும் பெருவிழா நடைபெறுகிறது. இவ்விழாவில் இலட்சக் கணக்கான இந்துக்கள் கலந்துகொள்வர்.

யமுனைக் கரையை அடுத்து அலகாபாத் கோட்டை இருக்கின்றது. கோட்டையின் ஒரு பகுதியில் சுரங்க மாடம் ஒன்று இருக்கிறது. நிலமட்டத்தின் கீழ் அவ்விடம் கட்டப்பட்டுள்ளது. வடநாட்டுப் புராண வழக்கப்படி பல உருவச்சிலைகள் அமைத்து அங்கு வழிபாடு செய்யப்படுகின்றது. அச்சிலைகளில் ஒன்று தமிழர் பெற்ற திருவள்ளுவர். மொழிவெறி ஆடும் உத்தரப் பிரதேசத்தில், தமிழர் பண்பைச் சுட்டிக் காட்டுதற்கு ஒரு சான்ருக அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையை வணங்கினேம். பொதுமறை கண்ட அந்தப் பொய்யா மொழியின் திருவடிகளைக் கங்கை நீராட்டுவித்தோம்.

திரிவேணி நீராடல் முடிந்தபின்னர் பிரயாகைத் தலத்தில் முன்னேர்கட்குச் சிராத்தம் செய்து அமைதி கண்டோம். பிறகு அலகாபாத் நகரத்தின் பொருட்காட்சி சாலைக்குச் சென்ருேம். அங்கு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவற்றுள் நமது பிரதமர் பண்டித நேரு அவர்கட்குக் கிடைத்த பலநாட்டுப் பரிசுப் பொருட்காட்சி யாகும். மேனுட்டு மேதைகள் பலரும், பாராளும் மன்றத் தலைவர்கள் பலரும், உலகம் போற்றும் உத்தமர் பலரும் பாராட்டி வழங்கிய பாராட்டுரைகளும், அறிவுச் சிற்பிக்கு அன்புடனளித்த அரும் பெரும் பரிசுகளும் வைக்கப்பட்டுள்ளன.

அதன்பின் அவர்கள் இல்லமாகிய ஆனந்த பவனத்தைக் காண வந்தோம். பூஞ்சோலைகளும், செயற்கை நீரூற்றுக் களும் நிறைந்த அவர்கள் பவனம் ஆனந்தபவனம் என்று சொல்வது மிகையல்ல. அந்தக் குபேரச் செல்வர், தன்னலம் துறந்து, பிறர்நலம் பேணி, அரசியல் பற்றி, ஆங்கிலக் கோட் டையைத் தகர்க்கச் சிறைத்தவம் புகுந்த வரலாறு நமது நினை விற்கு வருகிறது. நேருஜி அவர்கள் ஆனந்த பவனத்தில் அதிகமாக வசிப்பதில்லை. ஆயினும் அம்மாளிகையைக் கண்ட வுடன் மக்கள் சரித்திர உணர்வு பெறுகின்றனர். மனிதனாகப் பிறந்த பயன் மக்களுக்கு உழைப்பதுதான் என்பதைக் கண்ட குபேரக் குடும்பத்திற்குச் சான்றாக விளங்குகிறது இன்று அந்த ஆனந்தபவனம்.

அலகாபாத் நகரத்தை ஒருவாறாகச் சுற்றிக் கொண்டு ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தோம். அசதியும் ஆனந்தமும் பொங்கிப் புகைவண்டியில் கண்ட நெருக்கடியும் மறந்து 20-5-59 அன்று ஹரித்வார் வந்து சேர்ந்தோம்.

சைவர்கள் அரத்துவாரம் என்கின்றனர்; வைணவர்கள் அரித்துவாரம் என்கின்றனர். இரண்டுக்கும் பொருள் ஒன்றாகவே கொள்ளப்படும் வகையில் இந்நீர்த்துறை அமைந்திருக்கிறது. (ஹரி=மோட்சம்; த்வார் = வாயில்) எனவே மோட்சத்தின் வாயில் என்று கொள்வதில் யாவரும் மகிழ்ச்சியடைகின்றனர்.

இதற்கு மாயாபுரி என்றும் பெயர். இந்தியாவின் ஏழு முக்கியத் தலங்களுள் ஒன்றாகிய மாயா என்பது இவ்விடம் என்றும் கூறப்படுகிறது. ஹரித்வாரத்திலுள்ள தீர்த்தத்திற் குப் பிரமகுண்டம் என்று பெயர். தக்கன் வேள்வி நடத்திய போது சதி தன் உடலை நீத்த இடமும் இதுவென்று கூறுவர்.

> "Brahmakund known as
> the most important of
> all Tirthas" -Swami Chinmayananda.

ஹரித்வாரத்தில் கங்கையின் வேகம் சொல்லும்தரமன்று. சிவபெருமானை யன்றி வேறு எவராலும் கங்கையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் கிடையாது என்பதை ஆங்கு அனுமானிக்க

முடியும். ஆவேசமாகப் பாய்ந்து ஓவென்ற இரைச்சலுடன் வருகிறது கங்கை. மே மாத வெப்ப நிலையிலும் சில்லென்ற குளிர்ச்சியுடன் பாய்ந்து வரும் தண்ணீரில் ஒரு நறுமணம் கமழுகின்றது. இமயச் சாரலின் பனிப்படலம் உருகிப் பெருகி, மலை வளர் மூலிகைச் சத்துக்களையும் வடித்துக் கொண்டு வந்து மக்களின் மாசுகளைப் போக்கும் தன்மையை ஹரித்வாரத்தி லின்றி வேறெங்கும் கண்டிலோம். கங்கையின் வேகத்தைத் தமது சடையிற் தாங்கி உலகைக் காத்த சிவபெருமானைப் போல் ஹரித்வார் மக்கள் பிரமகுண்டம் என்ற நீர்த்துறையை அமைத்து நீராடும் மக்களுக்கு வசதியை அளித்திருக்கின்றனர். இத்துறையில் அன்றி வேறு கரையில் எங்கு இறங்கினும் மக்கள் விபத்துக்குள்ளாவர்.

வேகமாகப் பாய்ந்து வரும் கங்கையை ஒரு கால்வாயாக வளைத்து நீரின் வேகத்தைக் குறைத்து எவ்வித இன்னல்களும் இன்றி நீராடும் துறையாக அமைத்திருப்பது பாராட்டுக்குரிய தாகும். இந்தப் பிரமகுண்டத்தில் வெண் சலவைக் கற்களால் படித்துறைகள் கட்டப்பட்டுள்ளன. நீராடும் இத்துறையில் பெரிய பெரிய மீன்கள் கூட்டமாக வந்து மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. மச்சலிகாகுண்டு என்ற இனிப்புச் சீடைகள் கரையில் விற்கப்படுகின்றன. மக்கள் அவற்றை வாங்கி மீன்களுக்குப் போட்டு ஆனந்தம் பெறுகின்றனர்.

மாலையில் இக்கரையில் இலட்சக் கணக்கான மக்கள் கூடிக் கங்கா பூசை செய்கின்றனர். இலைகளாற் செய்த சின்னஞ்சிறு படகுகளில் மலர்களைப் பரப்பி ஆரத்தி விளக்கு ஏற்றிக் கங்கையை வணங்கிக் கப்பல் விடுகின்றனர். இலட்சக் கணக் கான இலைக்கப்பல்களில் விளக்குகள் மிதந்து கொண்டு செல்லும் காட்சி இலட்சதீபம் கண்ட இறைப் பயனைத் தருகின்றது.

சோதியாய்ச் சுடரு மானூர் சுண்ணவெண் சாந்துபூசி,
ஓதிவா யுலகம் ஏத்த உகந்துதாம் அருள்கள் செய்வார் – அப்பர்

மாலைப் பொழுது மங்கி இரவு படர்ந்தது. கங்கை அன்னை யிடம் விடைபெற்றுக் கொண்டு ரயிலேறி 22-5-59 அன்று டில்லி மாநகர் அடைந்தோம்.

———

(தொடரும்)

வள்ளுவன் கண்ட தக்கார்

பண்டிதவித்துவான் திரு. த. வடிவேலன் அவர்கள்,
இளங்கோநிலையம் 156, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

ஸ்ரீரியோர் தம் சிந்தனையிற் பேராவலொன்று இடம்பெறுகின்றது, உலகு செம்மை நெறியாற் சீர்பெற்றேங்கக் காண வேண்டுமென்ற ஆவலே அதுவாகும். உலகின்புறுவதே தமது இன்பமாகக் கருதினர் மேலோர். தான் வாழ தன் உறவினர் வாழ வழிகண்டு மகிழ்வதே நிறைவுதரும் வாழ்வாகும் எனக் கருத அவர்கள் உள்ளம் இடமளிக்கவில்லை. அனைத்துயிரும் இடரற்றுவாழ அவ்வின்ப நிலைகண்டு மகிழ்வதே உண்மையான மனித வாழ்வாகும் என்ற உயரிய எண்ணமே அவர்தம் உள்ளத்தில் இடம் பெற்றது. அதனால் அவர்தம் வாழ்நாளனைத்தினும் இன்பமுடன் வாழ்ந்து, தான்தன் உறவினர் என்ற எண்ணத்தை மாத்திரம் கொள்ளாமையால் "யான் எனது" என்னும் ஆசையற்று அழியா இன்பநிலையுற்றனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை பெற்றனர். அவர்கள் உடலழிந்ததெனினும் அவர் தம் புகழ் பரந்து எங்கும் ஒளி செய்கின்றது.

மனித வாழ்வில் பெறற்கரும் பேருக விளங்குவது புகழேயாகும். பிறந்ததன் பயனும் அதுவன்றி வேறில்லை. ஒருவன் இவ்வுலகில் பிறந்தான்; அவன் அனைத்துயிரும் வாழ்வதைக் கண்டின்புறும் ஆவலுடன் வாழ்ந்தான்; அவனே தக்கான் எனப் பிறர் உள்ளத்தில் அவன் நினைவு தோன்றுமாறு புகழ் கொண்டு வாழ்தல் வேண்டும். அவ்வாறு பெறத்தகும் புகழைத் தேடாது தனக்கென தன் உறவினருக்கென உழைத்து இவன் நடுவு நிலைமையை விட்டுப் பிறர் வருந்த வாழ்ந்தானெப் பிறர் பழிகூற வாழ்வதைவிட அவன் பிறவாது இருந்து விட்டால் நல்லதாகும்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (கு. 236)

என்றும், இவன் தனக்கெனை வாழ்ந்தான்; தன் உறவினர் வாழ்வு கருதி உழைத்தான்; பிற உயிர்கள் துன்புறுவதை நோக்கினனல்லன்; தானும் தன் சுற்றமும் ஆக்கமடைவதை நோக்கியவன் அவ்வாக்கத்தைத் தேடும் செயலால் பிற உயிருக்கு இன்னலைச் செய்தான் எனப்பிறர் அவனைப் பழிகூறு மாறு—வசையுரை சொல்லும்படி உடலோம்பும் வாழ்வினைக் கொள்ளாது விட்டு இவன் எல்லா உயிர்களும் வாழவே பிறந் தன என்ற உயரிய உள்ளமுடையவனாய் அனைத்துயிரும் வாழக் கண்டு இன்புறும் நடுவு நிலைமையாளனாக நம்முன்னின்று பணியாற்றினனல்லவா? இவனே தகைமையாளன் என அனை வரும் புகழும் இசையொழியாது- புகழ் என்றும் நிலைபெற வைத்து வாழ்தல் வேண்டும்.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர் (கு. 240)

புகழை இழந்து உடலழிந்ததும் உலகினர் தம் உள்ளத்தில் இடம் பெறாது செல்வோர் வாழப் பிறந்தும், என்றும் நிலை பெறும் வாய்ப்பினைப் பெற்றிருந்தும் புகழ்பெறும் வழிகாணா மையால் வாழாதவராகின்றனர் என்று கூறும் வள்ளுவன் வாழ்வின்பயன் புகழ்பொன்றாது நீடித்து நிலைபெறச் செய்த லொன்றே யாகும் என்பதனை உளங்கொளச் செய்கின்றார்.

புகழ் என்றும் பொன்றாது நிலைபெறச் செய்து உட லொழிந்தும் வாழ்வுபெறுவோர் நடுவுநிலைமையாளரே என்பதனை உணர்கின்றோம். அவர் தமையே தக்கார் என உயர்வு தந்து உரைக்கின்றான் வள்ளுவன்.

இவன் நடுவுநிலைமையுடையோன்; இவன் நடுவுநிலைமையில் லான் என்பதனை அறிதற்கு அவன் தன் உடலொழிந்ததும் எஞ்சிநிற்கும் பொன்றாப் பொருள் ஒன்றே சான்றாகும்.

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப்படும் (கு. 114)

என வள்ளுவன் சொல்லும் உரையினைச் சிந்தனை செய்த உரையாசிரியர்கள் பலரும் தம் உள்ளத்தில் தோன்றிய விளக்கத்தை நம்மிடம் தந்துநிற்கின்ருர்கள். அவ்வுரைகளைச் சிந்தித்தல் நம் கடனல்லவா? பரிதியார், பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர் என்னும் நால்வர் தம் உரைகளுமே நமக்குக் கிடைத்துள்ளன. அவ்வறிஞர் பெருமக்கள் நால்வர் தம் உரைகளும் வள்ளுவன் தன் உள்ளக்கருத்தை உணர்த்திநிற்பனவா? உலகியலை உற்றுநோக்குமிடத்து இவர்தம் உரைகள் பொருத்தமுடையனவா? எனப்பகுத்தறிவின் வழிநின்று நோக்குதல் அறிஞர்தம் கடனுகும்.

போன சென்மத்திலும் இந்தச் சென்மத்திலும் நடுவுநிலைமை பெற்றவராம் என்று அறிக அவர் புதல்வர் சற்குணத்தால் என்றவாறு என்கிருர் பரிதியார்.

பழவினைப் பயனுல் - முற்பிறவியில் செய்த வினைகளின் பயனுல் சற்குணமுடைய புதல்வரைப் பெற்ற பெற்ருேர் பலர் நடுவுநிலைமை இல்லாதவராகவும், சற்குணமில்லாத புதல்வரைப் பெற்ற பெற்ருேர்பலர் நடுவு நிலைமை உடையவராகவும் வாழ்வதை நாம்நேரில் காண்கின்ருேம். பரிதியார் சொல்லுகின்றபடி பார்த்தால் சற்குணமுடைய புதல்வரைப் பெற்றவர் என்பதற்காக நடுவுநிலைமை இல்லாத பெற்ருேரை நடுவுநிலைமை உடையவரென்று கொள்வது சரியாகுமா? அன்றேல் சற்குணமில்லாத புதல்வரைப் பெற்றவர் என்பதற்காக நடுவு நிலைமை உடைய பெற்ருேரை நடுவு நிலைமை இல்லாதவரென்று கொள்வது சரியாகுமா? ஒருவர் நடுவு நிலைமையுடையவராய் வாழ்ந்தாராகுல் அதனைக் கண்ட நல்லோர் இவர் தகவுடையவர் எனப் போற்றும் புகழுரையே என்றும் பொன்ருது நின்று அவர் தக்கவர் என்பதனைக் காட்டும் சான்ருகும் என்பதே உலகியலில் ஒப்பத்தகுந்த உரையாகுமேயன்றி உலகியலுக்கு மாருன பரிதியார் கூற்றுப் பொருத்த மற்றதாகும். பழவினைப் பயனுல் - ஊழின் வழிப்பட்டு சற்குணமுடைய புதல்வரைப் பெற்ற பெற்ருேர் ஒருசிலர் நடுவு நிலைமையுடையவராக வாழ்கின்றனராகுலும், அவர் நடுவு நிலைமையுடையவரென்று உயர்ந்தோர்

போற்றும் புகழ் என்றும் எஞ்சிநின்று அவர் தக்கவர் என்பதனை அறியும் சான்ருகுமே அல்லாமல் பெற்ருேரின்பின் ஒருசில காலத்தில் உடலழிந்து இவ்வுலகைவிட்டு நீங்கும் புதல்வர் என்றும் பொன்ருது நின்று பெற்ருேர் நடுவுநிலைமையுடையவர் என்ற தகவுடைமையைக் காட்டும் சான்ருதல் எங்காவது உண்டா? கால அளவு வந்ததும் இறக்கும் மனிதனை என்றும் நின்று விளங்கும் சான்ருதல் கூடுமெனக் கொள்வதுசரியாகாது.

இவர் நடுவு நிலைமையுடையவர் இவர் நடுவு நிலைமையிலர் என்னும் விசேடம், அவரவருடைய நன்மக்களது உண்மை யானும் இன்மையானும் அறியப்படும் என்றவாறு.

தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லை யாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவைகுறியாயின என விளக்கந்தருகிருர் பரிமேலழகர்.

இல்லற வாழ்வினை மேற்கொண்டும் பழவினைப்பயனுல் மக்களைப் பெறும் பேற்றினை இழந்து வாழ்கின்ற பலர் நடுவு நிலைமையுடையவராக வாழ்வதை நாம் நேரில் காண்கிருேம். இல்லற வாழ்வு வாழ்ந்தும் மக்களைப் பெருது உடலழிந்து இவ் வுலகினை விட்டுப் பிரிந்த நடுவுநிலைமையாளர் பலர் உலகினரால் புகழப்படும் பேறுபெற்று என்றும் அழியாது நிலைபெறும் அப் புகழினுல் தக்கவரென மதிக்கப்படுவதை நாம் எங்கும் கேட் கிருேம். இவ்வாறு மக்களை இல்லாத நடுவுநிலைமையுடையோர் என்றும் பொன்ருது நிற்கும் புகழினுல் தக்கவரெனப் போற்றப் படுவதைக் கண்டும் கேட்டும் அறியும் நாம் நன் மக்கள் இல்லாமையால் தக்கவராகார் என்பது சரியெனக் கொள்வது சரியாகுமா? நடுவுநிலைமையில்லாதவர்கள் இவ்வுலகில் என்றும் பொன்ருது வைத்துச் செல்லும் பழிச்சொல்லே - வசையே எச்ச மாக நின்று அவர்தமைத் தகவிலார் எனக்காட்டி நிற்பதைக் காணும் நாம் தகவிலார்க்கு எச்சமில்லை என்று கொள்வது சரி யாகுமா? புருவின் உயிர்காத்த சோழமன்னனும் சிபியும், பசுவின் கன்றிற்காகத் தன் புதல்வனைத் தேர்க்காலில் நெரித்த மநுநீதிச் சோழனும் புகழினலா புதல்வராலா தக்கார் என மதிக் கப்படுகின்றனர்? புகழால்.

ஆற்றில் மிதந்துவந்த மாங்கனியை நீராடுகையில் கண்டெடுத்த பெண் அரச பொருளாம் மாங்கனியைக் களவாக எடுத்தாள் எனக் கொலை புரிந்த மன்னனும் நன்னன் என்பான் 'பெண் கொலை புரிந்த நன்னன்' எனப் பேசப்படும் பழியினுலா மக்களாலா தகவிலானுகின்ருன்? பழியினுல்.

பலரும் விரும்பும் இல்வாழ்வை விரும்பாது என்றும் நிலைபெறும் பேரின்ப வாழ்வினை வேண்டித் துறவுகொண்ட உண்மை அறிஞர்கள் என்றும் இறைவனையே சிந்தையில் நினைந்து இவ்வுலகுவாழ அன்பு வழிகாட்டினுர்கள் என்ற புகழ் என்றும் நிலைத்து நின்று அவர்தம் தகவுடைமையைக் காட்டவில்லையா? சோதிடம் பொய்யாது என்பதனை நம்பி; தான் இல்வாழ்வை விரும்பினுல் பெண்ணுசையால் வரும் மண்ணுசையும் தன்னைப் பற்றத்தான் முறைமைக்கு மாருக அரசியலை ஏற்கவும் கூடும் என்பதைச் சிந்தையில் வைத்து மூத்தோனும் சேரன் செங்குட்டுவன் மண்ணுளக்கண்டு உவகையுற விரும்பி பிறர் வாழத் தான் மகிழும் உயரிய உளப்பாங்குடன் நின்று துறவுகொண்ட இளங்கோவடிகளார் கற்பின் திண்மையால் பொற்புடைத் தெய்வமாய் விளங்கும் கண்ணகி தன் வரலாற்றைத் தந்து பண்டைய தமிழ் மாதர் தம் கற்பின் மாண்பினையும், தன் புகழினையும் போற்றவைத்துச் சென்றமையால் தகவுடையவராகவில்லையா?

ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்து செந்திலாண்டவன் அருளால் ஐந்து வயதில் ஊமை நீங்கப் பெற்று கந்தர்கலி வெண்பா முதலாகப் பல அருட்பாடல்களை அருளி தருமையிலமர்ந்து அருளாட்சிசெய்த குருமூர்த்திகளின் ஆணைப்படி காசி யாத்திரை சென்று கலைமகளருளால் கல்கத்தா நகரை ஆண்ட பாதுசா மன்னனும் எழுந்து வரவேற்கும் வண்ணம் சிங்கத்திலமர்ந்து சென்று என்றும் கற்றறியா இந்துஸ்தான் மொழியில் மன்னனுடன் உரையாடி பிறமொழி வழங்கும் காசியிலும் தமிழும் சைவமும் பரந்து ஒளிபெறப் பணியாற்றிய குமரகுருபரன் தன்புகழினை அனைவரும் போற்ற வைத்துச் சென்றமையால் தகவுடையவனுகவில்லையா?

யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்து துறவுபூண்டு ஆங்கில ராட்சியால் விழ்ச்சியுற்றுத் தமிழில் அருமை தெரியாது வாழ்ந்த யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் கிறித்தவப் போதகர்களின் சூழ்ச்சி வலையில் அகப்பட்டு சைவத்தின் சமரச மாண்பினை - அன்பு கொண்ட நியாய வழிநிறுத்தும் பண்பினை இழந்து விடாதவாறு கிறித்தவருடன் வாதிட்டு யாழ்ப்பாணத்தில் சைவம்போற்றும் தமிழரினம் இன்றும் வாழுமாறும், இந்தியத் தமிழ் நாட்டினர் பழந்தமிழர் தம் பெருமையை மறந்து விழ்ச்சியுருது பண்டைத் தமிழன் தன் வாழ்வின் மாண்பினைக் காட்டி நிற்கும் திருக்குறள் முதலாம் நூல்களைப் புத்தக வடிவில் அச்சிடுவித்து உதவியும் தமிழினம் பெருமை மிக்க ஒரினம் என்பதனைத் தமிழருணர்ந்து மாட்சியுடன் வாழவும்; உலகினர் போற்றவும் பணிபுரிந்த நாவலன் தன் புகழால் அனைவரும் தகவுடையோன் எனப் பேசும் பெருமையினைப் பெற்று நிற்க வில்லையா?

1939-ம் ஆண்டு நிகழ்ந்த இரண்டாவது பெரும் போரிலே உலகனைத்தும் அஞ்சி அதிருமாறு ஐரோப்பிய நாடுகள் பல வற்றையும் மின்னல் வேகத்தில் கைப்பற்றச் செய்துநின்ற மணஞ்செய்யாது வாழ்ந்த ஜேர்மன் தேசத்துத் தலைவர் ‘கிட்லர்’ ஆங்கிலர் நியாயமின்றிப் பலநாட்டினரையும் அடக்கியாண்டனர் என்பதனைக் கண்டித்து நின்றும் தான் நியாயமின்றி நாட்டு மக்களைக் கொன்று குவிக்கக் காரணமாக நின்ருன் என்ற பழியினை - வசையினைப் பொன்ருது விட்டுச் சென்றமையால் தகவிலானுகவில்லையா?

ஒருவர் தக்கவர் என்பதனைப் பொன்றுப் புகழாகிய எச்சமும், தகவிலார் என்பதனை பழியாகிய எச்சமும் காட்டிநிற்கும் சான்ருகும் என்பதே உலகியலில் ஏற்கத்தகுந்த உரையாகுமே யன்றி உலகியலுக்கு மாருன பரிமேலழகர்தம் விளக்கம் பொருத்தமற்றதாகும்.

செவ்வையுடையார் செவ்வையிலரென்பது அவரவர் ஆர வாரத்தொழிலினுலே காணப்படும் என்றவாறு எனவிளக்கந் தருகிருர் மணக்குடவர். ஒருவர் தம் ஆரவாரத்தொழிலினை அவர் இவ்வுலகில் வாழும் பொழுது காணமுடியுமேயன்றி

உடலழிந்து இவ்வுலகைநீங்கிய பின்புகாணமுடிவதில்லை அவரது ஆரவாரத்தொழிலால் உண்டாகும் புகழோ அன்றிப்பழியோ தான் என்றும் நிலைத்துநின்று தகவுடையவர் தகவிலர் என் பதனைக் காட்டி நிற்கும் எச்சமாகின்றன. எனவே உலகியலுக்கு மாறுன மணக்குடவர் தரும் விளக்கமும் பொருத்தமற்றதாகும்.

இவர் நடுவுநிலைமையாளர் என்பதும் மற்று அஃது இல்லா தவர் என்பதும் அதனை அவரவர் ஒழுக்கத்தால் காணப்படும் என்றவாறு எனவிளக்கந்தருகிருர் காலிங்கர். ஒருவன் இவ் வுலகில் வாழும்பொழுதுதான் அவனது ஒழுக்கத்தை அறிந்து அவனது தகுதியை வகைப்படுத்த முடியுமேயல்லாமல் உட லொழிந்து சென்ற பின்பு ஒழுக்கம் எஞ்சிநின்று அவன் தகுதி யினைக் காட்டும் இயல்பு இல்லை. அவ்வொழுக்கம் அவனது புகழுக்கோ அன்றிப் பழிக்கோ காரணமாகின்றது என்பது உண்மையே எனவே காலிங்கர் தரும் விளக்கமும் உலகியலுக்கு ஒப்பதாக இல்லை.

வள்ளுவன் தன் உள்ளத்தை உலகியலுடன் ஒப்பவைத்து நோக்கும் எவரும் வள்ளுவன் தானே உலகினர் இசையென்னும்- புகழென்னும் எச்சத்தைப் பெருவிட்டால் வசையென்ப-பழியென் னும் எச்சமுடையவராவர்;

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெருஅ விடின் (கு-238)

என எச்சமிது வென்பதைச் சுட்டிக் கூறுவதுகொண்டே ஒருவன் எச்சமாகப் பெற்று வைப்பது புகழ் இன்றேல் பழியே என்பதனை உணரவைத்து நின்று,

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப்படும்

என்ற உரையில் எச்சமெனக் குறித்தவை புகழும் பழியுமே என் பதனை உறுதிப் படுத்துகின்றமையைக் காணும் நாம் கொள்ளத் தகுந்த உரையாது என்பதனைத் தெரிந்து கொள்வது எளிதாகு மல்லவா?

கொள்ளத் தகுந்த வள்ளுவன் உள்ளக்கருத்தைக் காண் போம்;

தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமையுடையவர் இவர் நடுவு நிலைமையிலர் என்பதனை, அவரவர் எச்சத்தால் காணப்படும் - அவரவர் தேடிவைத்துச் செல்லும் புகழினாலும் பழியினாலும் அறிந்து கொள்ளலாம்.

இவர் நடுவுநிலைமை யுடையவர் என்பதனை அவரது எச்சமாகப் பொன்றாது நிற்கும் புகழினாலும், இவர் நடுவுநிலைமையில்லாதவர் என்பதனை அவரது எச்சமாகநிற்கும் பழியினாலும் கண்டு கொள்ளலாம் என உரைவிளக்கங் கொள்ளுதலே உலகியலை உணர்ந்துரைத்த வள்ளுவன் தன் உள்ளக் கருத்தைக் காட்டுவதாகும் என்பதே எனது உள்ளத்திலெழுந்த கருத்தாகும்.

பொன்றாப் புகழினால் தகவுடையனாய் நம்முன் விளங்கும். வள்ளுவன் உள்ளக்கருத்தை அறிதல் அறிஞர் கடன். வள்ளுவன் ஒளிகொண்டு வையகம் வாழட்டும். வாழ்தல் வேண்டும்.

"மிதிலைக்கொடியும் துவரைக் கொடியும்"

வித்துவான், பனசை. திரு. சு. சடையப்பன் அவர்கள்.
தமிழாசிரியர், மன்றப்பெரும்பள்ளி, ஊத்துக்குளி.

——[o]——

காட்சியின் மாட்சி:

ஓர் ஓவியம். வண்ணம் தீட்டிய பெண்ணின் ஓவியம். அதனைக் கண்ணுறுகின்றனர் ஐவர். ஒருவன் வரைவுச் சிறப்பையும், உருவ அமைப்பையும் ஓவியப்பொற்பையும் அதன் கண் காண்கின்றான். அவன் ஓவியன். இரண்டாமவள் பெண். அவ்வோவியமும் பெண்ணோவியமாதலின் அவ்வோவியம் பூண்டுள்ள அணிவகைகள், ஆடைவகைகள் போன்றவற்றை அப்பெண் நோக்குகின்றாள். மூன்றாமவன் ஒரு படத்தயாரிப்பாளன். படத்தில் நடித்தற்கேற்ற முகப்பொலிவும் தோற்ற எடுப்பும் உடற்கூறமைப்பும் பிறவும் தூரிகையால் வரைந்த காரிகையோவியத்தில் உள்ளதைப் பார்க்கின்றான். நான்காமவன் கட்டிளங்காளை. ஓவியப்பாவையின் பேரழகில் ஓரவிழிப்பார்வையைப் போக்கவிட்டு நீக்க வழியின்றி நிலைத்து விட்டான். அம்மட்டோ? இத்தையல் போன்றாளைத் 'தை'யில் மணமுடிக்க மையல் மிகக் கொண்டு விட்டான் அப்பையன். இதனைக் கவிஞன் ஒருவனும் கண்டான். நன்னரோவியமாம் பெண்ணுருவின் பொலிவும் தோற்றமும் கண்டு உளமாரப் பாராட்டி உவமை கண்டு மகிழ்ந்து, மகிழ்விக்கின்றான்.

இதனால் நாம் அறிவது என்ன? ஓவியத்தைக் கண்டவர் ஐவர். அவர்கள் தனித்தனியாக வெவ்வேறோவியத்தைக் கண்டனரோ எனின், இல்லை. அத்துணைபேரும் சித்திரம் ஒன்றையே கண்டனர். எனினும் ஒருவர் கண்கட்கு ஒரு கோணத்தில் ஒன்று பட்டால் மற்றவர் கண்கட்கு மற்றொரு கோணத்தில் மற்றொன்று

படுகிறது. ஒருவர் கண்டதனை மற்றவர் காண்கிலர். ஒருவர் சிந்தையில் வந்தது மற்றவர் சிந்தையில் - காட்சிப்பொருள் ஒன்றுகவேயிருந்தும் - வந்திலாததே இங்கு விந்தை! நோக்கு வோர் தன்மைக்கும் அறிவிற்கும் ஏற்ப நோக்கின் போக்கு அமைகின்றது என்பது இதனுல் நன்கு புலனுகும்.

மிதிலைக்கொடி:

இதைப் போன்று உலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றை யும் பொதுவாக நம் நோக்கினின்றும் வேறுபட்டே கவிஞர்கள் கண்டுள்ளனர் என்பதை இலக்கியங் கொண்டு காணலாம்.

எதிலும் சிறந்த மிதிலைமாநகர் அன்று விழாக்கோலம் பூண்டு விளங்கியது. பன்னுட்டு வேந்தர்கள் மிதிலையை முன் னேக்கி விரைந்தனர். வில்வளைக்கும் வேந்தருக்கு மெல்வளைச் சீதையை மணமுடித்துத் தருவன் என முரசடித்துச் சாற்றியிருந் தனன் சனகவேந்தன். வேலைசூழ் உலகாள் வேந்தர்க்கு ஓலை பல போக்கியதால் வில்லை வளைத்தொடிக்கும் முற்றமதில் கொற்றவர்கள் கூடியிருந்தார்கள். அந்நிலையில்—, இராமனும், தன்னிளவல் இலக்குவன், தவமுனிவன் இவர்களுடன் மிதலை நகர்ப் புறக்கோட்டை மதில் சார்ந்தான்.

நகர்க்கோட்டை மதில் மீது நாடறியப் பறந்து கொண் டிருந்தன கொடிகள். அசைந்து வருங்காற்றுல் ஆடுகின்ற கொடிகள் கண்டார் கம்பர், உச்சிவரை உயர்ந்தோங்கி முகிற் கூட்டத் தசைத்தாடும் துகிற்கொடிகள் கம்பரது கட்புலனில் கைகளாய் உருக்காட்டுகின்றன. விருந்தினராய் வருபவரைக் கைகளை நீட்டி 'வருக வருக' எனவரவேற்பது வழக்கமன்றே! அத்தகு தோற்றங் காட்டுகின்றனவாம் அக்கொடிகள்.

புறக்கோட்டை மதில் சார்ந்த இராமன் முதலானேரைக் கண்டு, "பாற்கடல் தோற்றிய பாவையாந் திருமகள் யான் செய்மாதவத்தால் இங்கு வந்திருக்கின்ருள். ம ன் ன வ னே! அன்னவளை மணம் புரிய கணமேனும் தாழ்த்தாது கடிது நீ வா" என்றியம்பிக் கொடிகளென்னும் கைகளை நீட்டி வரவேற்கின்ற தாம் மிதிலை!

நம் கண்களுக்கு அம்மிதிலைக் கொடிகள் இத்தகைய செய்திகளைச் சொல்கின்றனவா? இல்லை. காற்றசைவால் கொடியசைதல் இயல்பு. இம்முறை கொண்டே காணும் நமக்கு இன்னோரன்ன காட்சிகள் புலப்படா. தம்கட்புலனுக்கெட்டிய காட்சியைக் கம்பர்,

மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின்வந்து
செய்யவள் இருந்தா ளென்று செழுமணிக் கொடிகளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா!

என்று நமக்குக் காட்டுகின்றார்.

ஒரு பொருளை நாம் நோக்கிக் காணும் காட்சிவேறு, கவிஞன் நோக்கிக்காணும் காட்சி வேறு என்பதனை மேலே கண்டோம். இனி நாம் இங்குக் காணப்போவதோ விந்தைக் குரியது. காணும்பொருள் ஒன்றேயாக இருந்தும்-காண்பவர்கள் கவிஞர்களேயாக இருந்தும்–அப்பொருள் அவர்கட்கு வெவ்வேறு காட்சிகளை நல்குமேல் அதனை விந்தை என்று சொல்வதிலொரு விந்தையில்லையன்றோ!

வருவோரை, ‘வருக வருக’ என வரவேற்பது போலக் கம்பருக்குக் காட்சி தந்த ‘துகிற்கொடிகள்’, ‘செல்க செல்க’ எனச் செலுத்துவதாக வில்லிபுத்தூராருக்குக் காட்சி நல்கினவாம்!

துவரைக்கொடி:

பாரகத்தின் பாரந் தீர்க்கப் பாரதப்போர் மூண்டு விட்டது. துரியன் பொருதற்குத் துணைநாடினான். கார்வண்ணன் நமைச் சார்ந்தால் யார் வந்து போரிடினும் வெல்வோம் என நினைந்து துவரைப்பதி நோக்கித் துணையழைக்கப் புறப்பட்டு வரலானான்.

இந்நிலையில்—, துவரை நகர்க் கோட்டை மதில்மீது துகிற் கொடிகள் காற்றசைவால் நிலையின்றி அசைந்தாடி அழகு செய்து கொண்டிருந்தன. வில்லியின் பொல்லாக் கண்களுக்கு அவை, வேண்டாதவர் வருங்கால் ‘போ போ’ எனக் கைகளால் தடுத்துப் போக்கும் பாரியல்பைப் பறைசாற்றியது. பின்னிகழ்வை

முன்னறிந்த புலவர் பெருமகனுர் பட்டதைப் பட்டவாறே சொல்லி விட்டார்.

'சூரியனே! நீ துணைநாடித் துவரை நோக்கி வருகின்ருய். வந்தாலும் என்ன பயன்? எம்கொண்டல் வண்ணன் பாண்டவர்க்குப் படைத்துணைவருய் அணைவானேயன்றி உன்னிடத்து நண்ணுவாஞே? பயனின்றி வந்து நயமின்றிப் போவதினும் ஈண்டு வராது மீண்டு போதலே தக்கது. ஆதலால் 'போ போ' எனக்கூறிக் கொடிகளென்னும் கைகளால் தடுத்துப் போக்குவது போன்று காட்சி கொடுக்கின்றதாம் துவரை! நம் கண்கட்குப் புலனுகாத ஒன்றை - தம் கண்கட்குப் புலனுகிய காட்சியை:-

"ஈண்டுநீ வரினும் எங்கள் எழிலுடை எழிலிவண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லால் படைத்துணையாக மாட்டான்
மீண்டு போகென்றந்த வியன்மதிற் குடுமிதோறும்
காண்டகு பதாகையாடை கைகளால் தடுப்பபோன்ற!"

என்று கூறிய வில்லியின் சொல்கொண்டு கண்டு சுவைமின்!

"வாழ்க கவிஞர்தம் காட்சியின் மாட்சி"

இரண்டாம் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

இல்லானே உள்ளானே

திருமதி. ஜெ. புவனேசுவரி அவர்கள்,
சோமாஸ் நிலையம், வள்ளீஸ்வரன் தோட்டம், சென்னை-28.

விரிந்த நீள்வானம், பரந்த நீலநிறக் கடல், இடையில் இவ்வண்ட கோளம், இதனுள்ளே காண, மகிழ மனநிறைவை அடைய பல பொருட்கள் உள. அவைகளைக்கண்டு மானசீகமாக அனுபவித்தால்தான் எத்தனை கோடி இன்பங்கள் படைத்தாய் இறைவா என நம் நாவு அசைகின்றது. காண இயலாத, ஆனால் மகிழ, மனநிறைவை அடைய ஒன்றுண்டு. "பிறந்த பல்லுயிரின் மனத்தளவு உறைந்த" அதன் பெருமையை முழுவதும் உணர் வார் இவ்வுலகில் எவருண்டு? அதன் உருவை "இது தான்" என ஒன்றை உருவகப்படுத்துவாரும்தான் உண்டா?

வாழ்க்கை என்னும் கடலிலே, அறியாமை என்னும் சூரு வளியிலே சிக்கி நல்லறிவால் மீண்டு, அனுபவ அலைகளோடு மீண்டும் போராடிக் கடலை கடந்து 'வீடு' என்னும் கரையை அடைய ஒவ்வொருவருக்கும் ஒரே ஒரு படகோட்டி வழிகாட்டு கிறான். பகுத்தறிவால், பண்பால் அத்துன்பக் கடலிலேயும் இன்பங்கண்டு, படகோட்டியின் உதவியால் மீள்பவர் உளர். சிக்கி மீளாமல் சீரழிவாரும் உளர்.

உலகத்திலுள்ளே பலகோடி உயிரில் ஆண்டவனின் அன்பு நிழல் பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. மனிதனின் சாதாரண கண்ணுக்குப் புலப்படும், ஒரு விதை. விதையிடுவான், நீர் ஊற்றுவான், உரம் பாய்ச்சுவான், அதைக் கொண்டு அவ்விதை உயிர்கொண்டு முளைத்து விடுமா? எவ்விதைக்கும் வித்தாகி, எம் முளைக்கும் முளையாக ஒரு சக்தி இருக்கத்தானே செய்கிறது. இதை வியந்தே அடியவர் பலர் 'ஒளியினும் ஒளியாய்' உயிரினும் உயிராய் எனச் சொல்லிப் பரவசப்பட்டனர். காண்பதற்கரிய

அச்சக்தியின் தோற்றம், பொருள்களினூடே மறைந்து விளங்கு கிறது.

சார்பிருற் றேன்ருது தானருவாய் எப்பொருட்கும்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பம் தகைத்தரோ
வாய்மொழியான், மெய்யான் மனத்தானறி விறந்த
தூய்மையதாம் மைதீர் சுடர். – பழம்பாடல்.

மனித உடலிலே பலவிதச் சத்துக்கள் இருக்கின்றன. அதனுல்தான் அது இயங்குகிறது என்கிறேம். அச்சத்துக்களைச் செயற்கை முறையில் திரட்டிச் சதைப் பிண்டத்தை அமைத்து உயிரூட்ட முடியுமா? உண்மை மனிதனைப் போல் உருவாக்க முடியுமா? முடியாது? ஏன்? உடல் வாழச் சத்துக்கள் அனைத்தும் இருக்கின்றனவே! கை கால்கள், இருதயம் முதலியவை பொருத்தமுற அமைந்து இருக்கின்றனவே! ஏன் மனிதனை உருவாக்க முடியவில்லை. முன்னேறும் விஞ்ஞானிகள் எத்தனை செய்தாலும் முக்கியமான தொன்றை அவ்வுடல் இயங்க 'ஜீவனை' உயிரை உண்டாக்க அந்த 'இறை' என்ற விஞ்ஞானியைத் தவிர மற்ற எவராலும் அமைக்க முடியாது. இவ்வண்ணமே உலகிலுள்ள சகல ஜிவராசிகளும் இயங்க ஒரு சக்தி உதவுகிறது. அதையே ஆண்டவன் என்கிறேம். கண்ணுல் காணுதற்கு இல்லானே! ஆனுல் உணர்வால் உணரக் கூடியவன். ஞானப் பெருவொளியாய் அண்டப் பெருவெளியிலே பரவி உள்ளானே.

அறியாமை இருளிலே பாசி படர்ந்து தவழும் இரணியனின் அகத்திலே அந்த நாராயணன் ஏன் அமரவில்லை? அதற்குப் பதிலாக ஆங்கு மும்மலக் காய்கொடிதான் படர்ந்து இருந்தது. ஆயினும் அவனுடைய மைந்தன் பிரகலாதன் உள்ளத்திலே பக்தி மலர் பூக்கவே அதில் அன்பு, அமைதியாகிய இருமணம் விசியது. தந்தையின் உள்ளத்திலே பூக்காத அம்மலர் தனயனின் இளமையிலே கலந்து விட்டது. வயது முதிர்ந்த தந்தைக்கு முன்னுல் உலக வாழ்வைத் துறந்த துருவன் கவின் பெறும் காட்டிலே, ஒரு ஒளியைக் கண்டு விட்டான். வஞ்சனையும், சூதும் கலந்த மூடனின் மனதில்

நிரந்தரமாக நிறையாத இறைவன் அன்பு, சாந்தம் கலந்த உயிரிலே இடைவிடாது உழலுகின்ருன்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே. – ஒளவையார்.

சிலர் ஆண்டவனுக்கு உருவம் அமைப்பது தகாதென்கின்றனர். மற்றும் சிலர் கல்லேச் சமைத்துக் கடவுள் எனில் அவர் சொல்லேக் கேளாதிர் என்கின்றனர். தூணிலும் துரும்பிலும் இருக்கும் அவன் கல்லில் மட்டும் இல்லேயா என்ன? உள்ளத்தே நம்பிக்கை கொள்ள, பலவித உருவில் அவன் கோயிலில் குடி இருந்தால் அதை ஓரிரு விநாடிகளாவது தம் கவலேகளே மறந்து கைதொழ உருவம் அமைக்கின்றனர். சாதாரண மனிதனுக்குக் கோயிலிலுள்ள தெய்வமே கடவுள். ஆனல் ஒரு பக்தனுக்கு அண்டமெல்லாம் அவன் உருவம். சாதாரணமாக ஒருவனுக்குச் சூரியன் சூரியனுகத்தான் காட்சி அளிப்பான். ஆனல் அடியார்களுக்குள் ஞானக் கண்ணிற்கு ஆதவன் திருநீல கண்டனுகத் தோற்றுகிருன்.

விரிகின்ற ஞாயிறு போன்றது மேனி, அஞ்ஞாயிறு சூழ்ந்து
எரிகின்ற வெங்கதிர் ஒத்தது செஞ்சடை, அச்சடை கீழ்
சுரிகின்ற காரிருள் போன்றது கண்டம், அக்காரிருட் கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுளதால் எந்தை ஒண்பொடியே.
– பொன் வண்ணத்தந்தாதி.

மானிடனுக்குப் பூமி பூமியாகவும், பௌவம் பௌவமாகவும் விசும்பு விசும்பாகவும், எண் திசை திசைகளாகவும், சூரியன் ஆதவனுகவும், சந்திரன் அம்புலியாகவும் காட்சி அளிக்கிறது. அவன் தோற்றத்தில் உருவாகாத இறைவன் அடியவனுக்குப் பூமி திருப்பாதமாகவும், பௌவம் துகிலாகவும், விசும்பு மெய்யாகவும், திசை கைகளாகவும், ஆதவனும் திங்களும் இரு கண்களாகவும் தோன்றி அவன் அறிவுக்கண்முன் திருமால் திருவடிவுக் காட்சியளிக்கிருர். ஊனக் கண்ணிலே இல்லாத இறைவன் ஞானக் கண்ணிலே நளினமாக இருக்கிருன்.

எல்லோரும் இறைவனே இறைஞ்சி வாழ்த்திஞலும், ஒரு சிலரின் உள்ளத்திலே அமர்ந்து பெருமையையளிக்கிருன். ஏன்?

'அன்பு' அங்கு பதிந்துள்ளது. பணமெனும் கருவியாலும், மனிதனின் உழைப்பாலும், காண்பதற்கினிய திருக்கோயிலினைக் குடிகளின் தெய்வமாகிய வேந்தன் அமைத்தாலும் அங்கு குடி யேருத இறைவன், அன்பெனும் கருவியாலும், பக்தியெனும் உழைப்பால் யாவரும் அறியாத பூசலாரின் உள்ளத் தண் தாமரைத் தடாகத்திலே அந்தச் செஞ்சடையான் கோயில் கொண்டான். உடலழகை அணிகள் ஏந்தியிருப்பது போல் அன்னுரின் உள் அழகைச் சிவனுர் ஏந்தி நிற்கின்ருர். ஆடம் பரக் கோயிலைவிட, இறைவன் பக்தி—அன்பு கலந்த கோயிலேயே அதிகம் விரும்புகிருன். இறைவன் எங்கே உள்ளான்?

உள்ளத்தில் உள்ளானடி – அதுநீ
உணர வேண்டுமடி
உள்ளத்தில் காண்பாய் எனில்கோயில்
உள்ளேயும் காண்பாயடி. – தேசிக விநாயகம் பிள்ளை.

நம்மை நாம் நன்கு அறியாவிட்டாலும் இறைவனை எனக் குக் காட்டுக! எனப்பிறரை வற்புறுத்துகிருேம். திங்களைப் பிடித்துத்தா என்று அலறும் குழந்தைக்குத் தாய் கண்ணுடியில் அம்புலியின் நிழலைப் பிடித்துத் தந்து அதனைச் சமாதானப் படுத்துகிருள். காண முடியாத இறைவன் அன்பும் அருளும் கூடியுள்ள இடத்தில் காட்சியளிக்கிருர். இல்லானுய், உள் ளானுய் எங்கும் நிறைந்துள்ளார்.

எத்துணையும் பேதமுரு தெவ்வுயிருந்
தம்முயிர் போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்ருர்
யாவ ரவருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தேன். – இராமலிங்க அடிகள்.

அல்லா என்பாரும், அரனரி என்பாரும், கர்த்தா என்பாரும் இருந்தாலும் எப்படி எப்படி எவரெவர் எதை யெதை வணங்கி னுலும் இறைவன் ஒன்றே? அண்டமெல்லாம் அவன் நிழல்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

இலக்கிய வளம்

(திருவாசகம்)

திரு. ப. முத்துக்குமாரசாமி அவர்கள்
இளங்கோ இல்லம், திருப்பராய்த்துறை.

அன்பின் வழியது உயிர்நிலை என்பார் திருவள்ளுவர். இந்த வையகத்திலே நாம் பல குறையாது வாழவேண்டுமானால் அன்பு வேண்டும். அன்பு இன்றி நாம் வாழ்ந்தால் நாம் வாழ்ந்தும் வாழாதவர்களாக வாழவேண்டும் என்று கருத்துப் பட பல இடங்களிலே திருக்குறள் அறிவுறுத்துகின்றது. கதிரவனின் செஞ்ஞாயிற்றின் ஒளி பரந்து ஆட்சி செய்யும் பாலை நிலத்திலே மக்கள் உயிர் வாழ்தல் அரிது. சமுதாயம் மலர்ந்து வாழ்வு நடத்துவதற்குத் தகுதி இல்லாத பாலையிலே வானோங்கிய மரங்கள் இருந்தாலும் அதன் பயனை நுகர்வோர் பாலையிலே இல்லை. அன்பு இல்லாதவருடைய வாழ்க்கையை விளக்க வந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் பயன் கொடுக்காத வற்றல் மரம் பாலை நிலத்திலே நிற்றல் போன்று சமுதாயத்தின் கண் அன்பு இல்லாதவர்கள் இருப்பது என்ற கருத்துப்பட

அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று

என்றார். திருவாசகம் யாத்துக்கொடுத்த மாணிக்க வாசகப் பெருமான் தனது நிலையை நன்கு உணர்ந்து பார்க்கின்றார். தனது நிலையிலே ஐயம் பிறக்கின்றது. தன்னிடத்திலே அன்

(முன் பக்கத் தொடர்ச்சி)

திருமேனி அவனுடைய அழகு. அவதாரம் அவன் இல்லாத எப்பொருளும் இவ்வுலகில் இல்லை. அவனின்றி ஓரணுவும் அசைய முடியாது அன்றோ! எனவே கண்ணிற்கு அவன் இல்லான், கருத்திற்கு உள்ளான் என்பது சிந்திக்கத் தக்கது.

புடைமை இல்லையோ நாமும் பாலையிலே இருக்கின்ற வற்றல் மரம் போன்று பயன் இல்லாது இருப்போமோ என்று ஐயுற்று

வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனே

என நொந்து இறைவனிடம் வேண்டுகின்றார். பின்னர் ஆண்டவனிடம் தனக்கு உள்ளம் கசிந்துருகி மாறாத அன்பை அருள வேண்டுமென-

ஊடி ஊடி உடையா யொடு
கலந்துள் ளுருகிப் பெருகி நெக்
காடி ஆடி ஆனந்தம்
அதுவே ஆக அருள் கலந்தே

என்று திருவாசகத்தில் வேண்டுகின்றார். மாறிலாத தூய அன்பை நாம் பெறுவது மூலம் இவ் உலகத்தைக் கூட இயக்க முடியும். அன்பின் திறத்தால் ஆண்டவனையும் அடையமுடியும், வானுலகத்தையும் ஆளும் திறன்படைக்கலாம் என்று மேலை நாட்டு ஆங்கிலப் பேராசிரியர்கள்

It's love, its love that makes the
World go round —Anon.
O happy race of men, if love, which
rules Heaven, rule your minds —Boethius.

என்று கூறுகின்றார்கள். தூய மனம் கொண்டு அன்புவழி நின்றால் அவனருளாலே நாம் அவன் தாள் வணங்குவதற்கு வழி பிறக்கும். எனவே மனமொழி மெய்களால் ஆண்டவனை உளமார நினைந்து நினைந்து நெக்குருகி வழிபட்டால் தில்லையிலே நடனம் புரிகின்ற நடையரசன் நமக்குப் பொன்னையும், பொருளையும், போகத்தையும் தருவான்.

பொதுவாக இந்த உலகத்திலே ஒருவரை ஒருவர் விஞ்சி இருக்க வேண்டும் என்று கருதுகின்றார்கள். தான் தான் சமுதாயத்தில் முதன்மையானவனாக, தலைவனாக இருக்க வேண்டும் என்று பலரும் நினைக்கின்றார்கள். பொறுப்பு ஏற்கின்ற தலைமைப்பதவி தலைசிறந்த பதவி. தன்னேரில்லாத தலைமைப்பதவிக்குரிய குணநலன்கள் பல உண்டு. தலைமைக்குத்

தளராத நெஞ்சுரமும்; எதையும் தாங்கும் இதயமும்; கண்டோரைக் கனிவிக்கின்ற ஆற்றலும் இவைகள் போன்ற பண்புகள் குறைவிலாது பெற்றிருக்க வேண்டும். ஆனால் இன்று தலைமைப் பதவிக்குப் போட்டியும் புரட்சியும் ஓங்கிவளர்கின்றது. தலைமைக்குரிய தகுதியோ நிறைவுடன் இல்லை. தலைமை நாடிப் பெறக்கூடிய பண்பு அல்ல. தகுதியுடையார்மாட்டு தலைமை நாடிவருவதுதான் நன்று. எனவே தலைமைக்குரிய போராட்டம் இன்று நேற்று தொடங்கியதல்ல. பண்டு தொட்டு, தலைமைக்குரிய தத்துவம் மலர்ந்த காலத்திலேயிருந்து போட்டி வளர்ந்து வருகின்றது. தக்கன் வேள்வி நடத்துகின்றான். வேள்வி விழாவுக்கு விண்ணவர்களையும்; வானவர்கள் போற்றிப் புகழும் முப்பெருங்கடவுள்களையும் அழைத்துச் சிறப்பித்தல் வேள்வி வழக்கு. அல்லையாண்டமைந்த மேனியான திருமாலும்; நான் முகனும் வேள்விக்கு அழைக்கப்பட்டிருந்தனர். விண்ணவர் போற்றும் தென்னவர் கோன் சிவபெருமானே அழைக்கப்பட இல்லை. காரணம் தக்கனுக்கும் காளத்திநாதனுக்கும் மனக் குறையாம்.

திருவள்ளுவரே வாயார வாழ்த்திய தனக்குவமை இல்லாதவனாகிய எம்பெருமான் சிவபெருமான். பிறத்தலும் இல்லாதவன் பிறவாயாக்கைப் பெரியோன் என இளங்கோ வடிகளால் புகழப் பட்ட தென்னாடுடைய சிவன். அவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். அத்தகைய கயிலையம்பெருமான் வேள்விக்கு அழைக் கப்பட இல்லை. வேள்வியோ முறையாக நடந்தது. வேள்விப் பொருளையும் விருப்புடன் திருமாலும் நான்முகனும் ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் பாற்கடல் கடையப்பட்ட காலத்தில் நஞ்சு எழுந்தது. நஞ்சைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் செய்வதறியாது வாய்புதைத்து நின்றார்கள். வேள்வி விருந் துக்கு வந்திருந்த திருமாலும் நான்முகனும் நஞ்சை அடக்கி அமரர்களைக் காக்கும் வல்லமை அற்று நின்றார்கள். கண்டவர் மருண்டனர். சிந்தை மயங்கி சிவன்பால் கருத்தைச் செலுத்தி உலகத்தின் அம்மையப்பராக இருக்கும் சிவனிடத்தில் முறையீடு செய்தார்கள். சிவபெருமானே புன்னகை பூத்து நஞ்சை உண்டு நானிலத்தை வாழ வைத்தான். நஞ்சுண்டும் வாழ்ந்தபெருமான்

நமது தலைவன். நாகரிகப் பண்புகளில் விழுமிய வேதநெறி முதல்வன், ஆன்ற விந்த கொள்கைகளில் அறநெறி போற்றி வளர்த்த உமையொருபாகன். தலைமைக்குரிய தகைமைசால் பண்புகளைப் பெற்றவன். அவ்வேதநெறி முதல்வனே நமக்கும் நானிலத்திற்கும் தலைவன். இந்தக் கருத்தை மாணிக்கவாசகப் பெருமான்,

சாவ முன்னாள் தக்கன் வேள்வி தகர்த்தின்று நஞ்சமஞ்சி
ஆவ வெந்தாய் என்றவி தாவிடும் நம்மவரவரே
மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல்
தேவரென்றே இறு மாந்தென்ன பாவேந்திரி தவரே, -திருச்சதகம் 4

என்று பாடுகின்றார்.

மாற்றான் நஞ்சு கொடுத்தாலும் மனம் நோவாமல் உண்டு வாழ்கின்ற பெருந்தகைமை உள்ளம் தமிழ்உள்ளம். இதுவே தமிழர் நாகரிகம். நாகரிகத்திற்கு இலக்கணம் கொடுக்க வந்த திருவள்ளுவன்,

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் – குறள்.

என்றார்

முந்தை இருந்தும் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர். - நற்றிணை.
என்று நற்றிணையும் நமக்கு நாகரிகச் சிறப்பை உணர்த்து கின்றது.

உலகியல் நிலையிலே இருக்கின்ற மாந்தர் அனைவரும் தன்னை அறியாதவன் என்று யாரும் சொல்லிக் கொள்ள மாட்டார்கள். தன்னுடைய அறிவின் திறத்தைக் குறைவுபடுத்தி விளம்பரப் படுத்திக்கொள்வது அறிவுடைமைக்கு இழுக்கு என்று நினைப்பர் மாந்தர். எனவே ஒவ்வொருவரும் தான் ஒரு அறிவாளி என்றே நினைத்துக் கொண்டு இருப்பார்கள். ஆனால் அறிவு என்று நினைக்கின்ற போது நாம் வெறும் புத்தக அறிவை வைத்து விமர்சனம் செய்து நான் அறிவு உடையவனாக இருக்கின்றேன் என்று பெருமிதம் கொண்டால் அது பயனுடையது ஆகாது. உண்மை அறிவு எது? அது எங்கிருக்கின்றது?

என்ற கேள்வி திருவள்ளுவர் முதல் திருவாதவூரர்வரை எழுந் திருக்கின்றது.

மாணிக்கவாசகப் பெருந்தகை அறிவு அறியாமை என்ற இரண்டு நிலைகளையும் நன்கு உணர்ந்து அதன் திறன் அறிந்து 'அறிவேன் அறியேன்' என்று கூறுகின்ருர். இந்த பேர் அனுபவத்தை உயிருண்ணிப்பத்தில் வெளியிடுகின்ருர். அவர் இறைவனை அருமருந்தாக அநுபவிக்கின்ருர்.

மருந்து பிணியை ஒழிக்கின்றது. அருமருந்து பிறப்பு என்ற தொடர்ந்து வந்து தொல்லைகள் பல கொடுத்து நம்மை யெல்லாம் நாசக்குழியில் தள்ளும் பிறவிப்பிணியை ஒழிப்பது. அமுதமோ சாவாமைக்கு வித்து. சாவாமை என்பது என்றும் அழியாத இன்ப வீட்டிலிருத்தி மகிழ்விப்பது. எனவேதான் மணிவாசகர் ஆண்டவனை அமுதமாகக் கண்டார். இந்தக் கருத்தை மணிவாசகத்தில்,

எச்சம் அறிவேன் நான் எனக் கிருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே அருமருந்தே எனதமுதே

என்று வாயார வாழ்த்துகின்ருர். தில்லையாண்டவன் நம்மைக் காத்து அருள்வதற்காக வானுலகைப் பழித்து இம்மண்ணுலகை வந்து அடைந்து நம்மையெல்லாம் காப்பாற்றுவான். நம் உள்ளத்திலே குடிகொண்டு, நமது வாழ்வியலில் நலம் பல குறைவு இலாது செய்ய நம்முடைய உள்ளத்திலே புகுந்து நம்மையெல்லாம் ஆட்கொள்ளும் பண்பு கொண்டவன் நமது இறைவன். இத்தகைய பண்பட்ட இறைவனை நீ கூவுவாய் தேன் பழச் சோலையிலே கீதம் இசைக்கும் தேமதுரக் குயிலே என்று வேண்டுகின்ருர் மணிவாசகர்.

தேன் பழச் சோலை பயிலும் சிறுகுயிலே இதுகேள் நீ
வான் பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன் பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வு அது ஆய ஒருத்தன்
மான் பழித்து ஆண்டமெல் நோக்கி மணுளனை நீ வரக்கூவாய்

என்று வேண்டுகின்ருர்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தமிழ் நாட்டுச் சமய நெறி வழக்கு. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது இலக்கிய மரபு. பொதுவாகத் தமிழ் நாட்டிலே சாதிய குல வைப்பு முறை தொன்று தொட்டு வளர்ந்து வந்த கொடிய தீய பழக்கமாகும். பண்டு சாதிய குல பகுப்பு முறைகள் அவரவர்களின் தொழில் திறனை வைத்து பகுக்கப்பட்ட பழக்க முறை. அந்த மரபு நாளடைவில் வளர்ந்து முதிர்ந்து, நிற இனமொழிகளின் அடிப்படையில் பிரிவுகள் கண்டு, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு உணர்ச்சிகளை உண்டு செய்து சமுதாயத்திலே சாதியின் பெயரால், சமயத்தின் பெயரால், இனமொழியின் பெயரால் சண்டை சச்சரவுகள் தொடங்கலாயின. திருநாவுக்கரசர் காலமான கி. பி. 7-ம் நூற்றுண்டிலே வளர்ந்து தடித்திருந்து சாதிய பேய் 20-ம் நூற்றுண்டிலே சாதியின் பெயரால் முதுகுளத்தூர் கொளுத்தப்பட்டது என்ற செய்தியைக்கேட்கின்ற போது நெஞ்சு பொறுக்குதில்லை. குறிப்பாக இன்றைய தென்னுப்பிரிக்காவின் நிலை ஓர் இன ஓர் குல வளர்ச்சிக்கும், மனித நாகரிகத்திற்கும் இழிவு படுத்துகின்ற வகையில் இருப்பதாகும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு மாணிக்கவாசகர் தில்லையாண்டவனிடம் ஆண்டவனே உலக சிக்கல்களில் சாதி, குலம், பிறப்பு போன்ற கொடிய தீய பழக்கங்கள் காரணமாக இருக்கின்றன. இத்தீமைகளிலிருந்து என்னை நீ காப்பாற்று. இந்த உலகத்தில் இருக்கின்ற செல்வங்களின் பேரில் எனக்கு பற்று இல்லாது யான் எனது என்ற செறுக்குகளை இல்லாது உன் திருவடிகளையே வாழ்த்தி வணங்கும் அருள் உள்ளம் எனக்கு வழங்க வேண்டும்" என்று தனது மணிவாசகத்தில் வேண்டுகின்ருர்.

சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம் யான் எனது என் உரை மாய்த்துக்
கோது இல் அமுது ஆனானைக் குலாவுதில்லை கண்டேனே

என்று கண்டபத்திலே மணிவாசகப் பெருமான் உள்ளம் தோய்ந்து வேண்டுகின்ருர். ஆனால் இதே கருத்தை கி. பி. 7-ம் நூற்றுண்டிலே வாழ்ந்த நற்றமிழ் வல்ல நாவுக்கரசுப் பெருமான் இதே கருத்தை வலியுறுத்துகின்ருர்.

சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்

என்றும்; வடலூர் இராமலிங்க வள்ளலார் பெருமான் தனது திரு அருட்பாவிலே

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே யபிமானத் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணே நீ ரழிதலழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்த ரவர்தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமீது கூவுகின்றே னுமையே.

என்று உள்ளம் தொடுகின்ற வகையில் வள்ளலார் பெருமான் அழகாகப் பாடினுர். வளருகின்ற வாழ்வுக்கு திங்கு விளைவிப்பது ஆசையும் பற்றும் என்று விளக்கம் கொடுத்த போதிமரத்து புத்தனும் இதே கருத்தைத் தான் சொல்லிச் சென்ருன்.

When man is proud of birth
And purse and family
And ashamed of kin
A source of suffering that

– Lord Buddha

என பிறப்பு இன நிற வேற்றுமைகளால் உயர்வு தாழ்வு இனங்களை உண்டாக்குகின்றவர்களைத் தாக்குவது போல சித்தாத்தர் சித்தாந்தம் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது.

எனவே ஆண்டவனை அடைவதற்கு சாதி இன வேறுபாடு இருக்கக் கூடாது. ஆனுல் தமிழகத்தின் பொல்லாத நிலை சாதியின் அடிப்படையிலும் குலத்தைக் காரணமாகக் கொண்டு சச்சிரவுகள் தொடர்ந்தே வந்து கொண்டிருக்கின்றன. திருநாவுக்கரசர் காலம் முதல் " சாதிகள் இல்லையடி பாப்பா " என்ற விரமுழக்கம் செய்த புத்துலகக்கவி பாரதி வாழ்ந்த நமது நூற்ருண்டுவரை இந்தச் சண்டைகள் வளர்ந்தே வந்திருக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20-வது பட்டத்து எம்பிரான்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

கருவில் திருவுற்ற நம்பிரான் என்று கண்டுகளித்த காட்சிப் பேறு

விருத்தப்பாக்கள்

1. எவன் அருட்டிறத்தால் எண்ணிலா நல்லறம்
இப்புவியில் இன்றும் ஓங்கும்
எவன் பொருட்டிறத்தால் பொருள் பொதிநூல்கள்
பலபொலிவுடன் உலகில் நிலவும்
எவன் திருக்குறிப்பால் சிவன்எனும் திருநாமம்
எண்டிசையும் முழங்கி ஆர்க்கும்
அவன்என்று காண்மின் அருளாளன் நந்தி
வடிவாகி வந்த அழகன்

2. எவனிந்த நாவலந்தீவில் தன் ஈகையால்
எண்ணிலார் பசியை மாற்றும்
எவனுடைய நாவினில் எந்தையார் திருநாமம்
இசையொடிசைந்து இயலும்
எவனுடைய கோடையிறல் பூசனைகள்
யாங்கணும் எழிலோடு மல்கிநிகழும்
அவன்என்று காண்மின் அருளாளன் நந்தி
வடிவாகி வந்த அழகன்

முன்பக்கத் தொடர்ச்சி

கின்றன. இந்த இன நிற சாதி வேறுபாடுகளை ஒழித்து "காக்கை குருவிகள் எங்கள் சாதி காடுமலை எங்கள் கூட்டம்" என்பன போன்று ஓர் குல ஓர் இனப்பற்றுடன் நாம் வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் நாமும் உய்யமுடியும் நானில மும் நலமடையும்.

வாழி உலகெலாம்! வளர்க நல்லறம்!

3. எவன் "மூலன் மரபில் வருமௌன குருவாய்" நின்று
எவர்க் குமுப தேசமருள்வான்
எவன்மூலம் திருநாளில் தோன்றியே புகழோடு
"மும்மையால் உலகமாள் வான்"
எவன் மூலம் சிவஞானம் ஏழிரண்டுலகினர்தம்
இதயத்தில் அரும்பிமலரும்
அவன்என்று காண்மின் அருளாளன் நந்தி
வடிவாகி வந்த அழகன்

4. எவன் பனைசைபதிதனில் இருபதாம் பட்டத்து
இலங்கி எம்மனங் கவர்ந்தான்
எவன் நாமம் உன்னிடில் "இருக்கு" முதல் நால்வேதம்
இருக்குதென்றுல குவக்கும்
எவன் உலகம் உய்யவே தேவார பரிசுவகை
எண்ணிலாதன வகுத்தான்
அவன்என்று காண்மின் அருளாளன் நந்தி
வடிவாகி வந்த அழகன்

திருவையாறு
6—3—'60

R. கோவிந்தசாமி நாயனுர்.

திரு. ஈ. எஸ். வரதராச ஐயர் அவர்களது மணிவிழா

அண்ணுமலைப்பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சி விரிவுரையாளராக இருந்தவரும், தமிழிலக்கிய வரலாறு முதலிய நூல்களை எழுதியவரும், பல துறைகளிலும் தமிழ்த் தொண்டுகள் புரிபவரும் ஆகிய திரு. ஈ. எஸ். வரதராச ஐயர் அவர்களது தமிழ்த் தொண்டைப் பாராட்டு முறையில் அவர்களது மணிவிழா 19-5-1960-உ சிதம்பரம் இளமையாக்கினுர் கோயிலில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம். ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அணில்

பனசை, திரு. சு. சடையப்பன் அவர்கள்,
தமிழாசிரியர், மன்றப்பெரும்பள்ளி, ஊத்துக்குளி,

அணிலே! அணிலே!! அழகுறு அணிலே!!!
அணியாய்ச் செல்வாய் அருங்கனி யுண்பாய்;
அன்றிரா மற்கு அரும்பணி செய்தாய்
என்றே மக்கள் ஏத்தற் கானாய்;
தேடுமால் நீவி நின்மேற் கோடு
படுமா றாச்செனப் பாரோர் புகல்வர்.
கணவன் இழந்த கோப்பெருந் தேவியும்
'அணிவரிக் கோடுங்காய்' என்றியம் பினரே;
புலப்பில் லில்போய்ப் பொலிவுற் றாடிப்
புலவர் புகழும் பேருற் றாயே;
அணிநலங் கண்டோர் அவரை யன்போடு
'அணிலாடு முன்றி லாரே'ன் றழைப்பர்;
'அணிற்பல் லன்ன கோங்குமுதிர் முண்டகம்'
எனவும் காட்டி இயம்புவர் பலரே;
பெரியோர் புகழும் பேறுற் றோய்நீ!
சிறியேன் யானென் செப்பிட இயலும்?
புலவர் பாடும் புகழுடை யோர்தாம்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பர் எழிலார் அணிலே!
எய்துவை நீயும் அப்பதம்
எய்துங் காலை எனைமற வேலே.

"உண்டாலம்ம இவ்வுலகம்"

திருமதி. ந. சி. கமலேசுவரி M. A. அவர்கள்
அய்யம்பாளையம், ஈரோடு.

உலகமே வாழ்கிறதே எதனுல் என்று சிந்தித்துப் பார்க்கிருன் ஒரு நாடாளும் மன்னவன். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பதைப் பலரும் அறிந்திருக்க அவன் நெஞ்சிலே மட்டும் ஏன் அந்த வினு எழுகிறது?

சான்றவர் சான்ருண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு விளக்கம் தருகிறது.

பாண்டிய மன்னவன் இளம்பெருவழுதியின் புறப்பாடல் ஒன்று.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்

என்கிருர் இளங்கோவடிகள். மன்னவன் குடை போன்று அளித்தலால் திங்களைப் போற்றவேண்டும் என்ற கருத்துப்பட இவ்வடிகள் பேசுகின்றன. இதேபோல் மழை, ஞாயிறு இவைகளையும் அவர் போற்றக் காரணம் அவை மன்னவனின் பண்புகளைக்கொண்டு பெருமையுற்றமையே. "உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினுன்" என்று தசரதனைப் புகழ்கிருர் கம்பர்.

இவ்வாறெல்லாம் மன்னவனுக்குப் பெருமை தந்த முடியாட்சியில் இப்பாண்டி மன்னன் என்ன பாடுகிருன்?

உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே

ஔவைக்கு ஏன் நெல்லிக்கனியை அதிகமான் கொடுத்தான்? அது தன்னை வாழ்விப்பதைவிட அவளை வாழ்வித்தால் உலகம் நன்மை பெறும் என்ற எண்ணம்தானே மூலகாரணம்? ஔவை அதை உண்ட பின்புதான் அருமையை உணர்கிருள். நஞ்சுண்டும் வாழ்ந்தானே ஒருவன் - கறைமிடற்று அண்ணல் - அவன் போல நீயும் வாழ்வாயாக என அவள் அவனை வாழ்த்துகிருள்.

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

என்பதுபோல் இத்தகைய உளப்பாங்குடையோர் ஓரிருவரால் தான் உலகமே வாழ்கிறது. வள்ளுவர் சொல்கிருர் –

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று

என்று. பகுத்துண்டலில் தான் இன்பம் முகிழ்கிறது. இன்பம் மட்டுமா? அது தலையான செல்வமன்றோ.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந்தலை

என்பதும் வள்ளுவன் வாக்கு. எனவே இத்தலையாய செல்வம் நிலைபெற்றிருப்பதால் உலகமும் நிலைமாறவில்லை என்கிருன் இளம்பெருவழுதி. இனி —

"............................முனிவிலர்
துஞ்சலும் இலர்"
"சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி
இனம் எனும் ஏமப்புணையைச் சுடும்"

எனவே இனத்தோடு அழிக்கும் சினங்காப்போர் சிலர். முரசு கட்டிலில் துயின்ற மோசிகீரனுருக்குக் கவரி விசினுன் இரும்பொறை. தாமப்பல் கண்ணனுரும், சோழன் மாவளத்தானும் வட்டாடியபோது புலவர் தன் தோல்வியை மறைக்க ஒரு காயை

மறைத்து விட்டார். மன்னன் காயை எடுத்து வீச அது புலவர் மீது பட்டுவிட்டது. "நீ சோழன் மகனு" எனக் கேட்டுவிட்டார் சினங்கொண்ட பாவலன். ஆனுல் இதைக் கேட்டும் பொறுமை காட்டினுன் காவலன். அறிவு தெளிந்த புலவர் தன் தவறுணர்ந்து மன்னனை வாழ்த்தினுர். மன்னனும் சினங் காட்டியிருப்பின் பிளவு ஏற்பட்டிருக்கும். எனவே சினம் அடங்கி அன்புள்ளங்கள் பின்னிப் பிணைவதே இன்ப வாழ்வின் அடிப்படையாம்.

துஞ்சலும் இலராய் இருப்பர் என்றுல் அது மக்களின் மன எழுச்சியைக் குறிக்கிறதல்லவா?

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்

என்று வாழ்வின் வீழ்ச்சிக்கு வள்ளுவர் காட்டும் பல காரணங் களுள் ஒன்றுன துயில் என்பதையே மன்னவன் தன் பாடலில் குறிப்பிடுகின்றுன். சோழன் நல்லுருத்திரன் நெல்லைக் கவர்ந்து சேர்க்கும் எலியனையார் கேண்மை எனக்கு வேண்டாம் - இடப் பக்கம் வீழ்ந்த பன்றியை உண்ணுது அன்று பட்டினியாயிருந்து மறுநாள் ஆண் யானையை வலத்தே வீழ்த்தி உண்ணும் புலியனையார் கேண்மை பெருகட்டும் எனப் பாடுகிறுன். எழுச்சி உள்ளமுடைய இத்தகையோர் சிலர் உளர் என்று அறிகிறேம்.

... பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

இங்கே பல கருத்துக்களின் குவியலைக் காண்கிறேம்.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

என்கிறது குறள். பழிக்கு அஞ்சுவர் சான்றேர். "அச்சமே கீழ்களது ஆசாரம்" என இகழ்கிறுர் வள்ளுவப் பெருந்தகை.

அஞ்சாமை யல்லால் துணைவேண்ட வெஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்

என்பது மன்னர்க்கேயன்றி மக்களுக்கும் பொருந்துமன்றே! அஞ்சுபவர் பகைவர்க்கு எளியர். பகையகத்துப் பேடிவாள் போலாகும் கற்றவன் அவையில் அஞ்சுவது.

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

என்கிறார் பாரதி.

"அஞ்சுவதுமில்லை அஞ்ச வருவதுமில்லை" என்கிறார் அடியார். நல்லனவற்றிற்கு அஞ்சுவதென்றால் அது தோல்வியை எதிர்நோக்குவது என்றுதானே பொருள்படும். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற வீரமொழி இன்றும் நமதுள்ளங்களில் எதிரொலிக்கிறதல்லவா ?

இனிப் புகழையும், பழியையும் ஆராய்கிறார் அரசப்புலவர். புகழ் என்றால் உயிரையும் ஈவர். இதற்குக் குமணன் சான்று. பெருந்தலைச் சாத்தனார் தன் தலையால் பணம் பெற்று வாழ வேண்டும் என்ற நோக்கமே குமணன் அவ்வாறு செய்யக் காரணம். பழி வரும் என்றால் அவன் உயிர்தர முன் வருவனோ! கூத்தரும் பாணருமாய் ஆடினர் பாடினர் வந்தால் நாட்டை மட்டுமென்ன தன்னையே ஈவான் என்ற வள்ளல்களைப் பெற்ற தமிழகமன்றோ இது!

பாரி பாரி என்று பலரும் ஏத்துகிறார்களே "மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே" என்பதை ஏன் மக்கள் மறந்துவிட்டார்கள் என வியக்கிறார் கபிலர்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்றால் புகழின் இடம் விளங்குறதல்லவா? இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் வரும் புகழே சிறந்தது என்கிறார் வள்ளுவர். "ஈதல் இசைபட வாழ்தல்" என்பதே அக்கால வள்ளல்களின் நோக்கம். புலவரைப் புரந்து இலக்கியம் வளர்த்த காவலர்கள் பலரைக் கண்டது இத்தமிழகம்.

"அயர்விலர்" என்பது அடுத்த பண்பு. குடிவிளக்கு மடியால் அணைந்துவிடும். மடியிலா மன்னவன் அடியளந்தான் தாயதெலாம் ஒருங்கெய்துவான். இவை வள்ளுவர் கருத்துக்கள். "முயற்சி திருவினையாக்கும்" தெய்வத்தாலாகாது எனினும் முயற்சி மெய்வருந்தக் கூலிதரும், ஊழையும் உப்பக்கம் காண

லாம் முயற்சியால் — இந்த எண்ணங்களைத் தன்னகத்தே கொண்டவர் என்பதை "அயர்விலர்" என்ற சொல்லால் பெற வைக்கிறார் அப்புறப்பாட்டாசான்.

> அன்ன மாட்சி அனையராகித்
> தமக்கென முயலா நோன்தாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மையானே

என முடிகிறது பாடல். இந்த மாட்சியெலாம் பெற்று பிறர்க்கென வாழும் பெற்றியுடையரால் 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்கிறார்.

குணநலம் சான்றோர் நலன் என்கிறார் வள்ளுவர். அந்தக் குணங்கள் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன. புறப்பாடலிலும் குறளாசானின் இப்பகுப்புக்களைப் பொருத்திப் பார்க்கலாம். அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம் இவை பிறர்க்கென முயலுநர் என்ற தொடருள் காணலாம் நாண் என்பது பழிக்கு அஞ்சுவது. இதை அஞ்சுவது அஞ்சுதல், என்பதாலும், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளார் என்புதாலும் அறிகிறோம். வாய்மை எனப்படுவது யாதொன்றும் தீமையிலாத சொலல் என்பது தெய்வப்புலவர் வாய்மைக்குத் தரும் இலக்கணம். தீமையே இல்லாத சிலர் உளர் என்பதே புறப்பாட்டின் உயிரோட்டம். எனவே இளம்பெருவழுதி எடுத்துரைப்பதெல்லாம் சான்றாண்மைப் பண்புகள்.

> ஊழி பெயரினுந்தாம் பெயரார் சான்றாண்மைக்கு
> ஆழி எனப்படுவர்.

பெயர்ந்தால் நிலம் புடைபெயர்ந்து விடும். குறளில் ஆங்காங்கே விரிந்து கிடக்கும் கருத்துக்களைத் தொகுத்து உலகின் ஒட்டத்திற்குச் சான்றோரை அச்சாணியாக்கிய பாண்டியன் புலமையைப் போற்றாமல் இருக்க முடியுமோ!

——[o]——

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவில் திகழும் கல்வி நிலைய உதவி நிதி

நிலைப்பெருமானம் ரூ. 20,0,000/-

'அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் – உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை'

'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றும் கல்வி'

'கற்றோர்க்குக் கல்வி நலனே நலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்'

என்று இன்னோரன்னவாறு கல்வியின் சிறப்பை அறிவுறுத்திய ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பெயரால் திருப்பனந்தாளில் நம்மால் நடத்தப்பெற்றுவரும் ஸ்ரீ குமரகுருபரச்சுவாமிகள் உயர்தொடக்கப் பள்ளிக்கும் (Higher Elementary School), திருலோக்கியில் நம்மால் நடத்தப்பெற்றுவரும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப்பள்ளிக்கும், (Elementary School), ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் நடத்தப்பெற்றுவரும் உயர்நிலைப் பள்ளிக்கும், தொடக்கப்பள்ளிக்கும், ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் நடத்தப்பெற்று வரும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும், உயர் தொடக்கப் பள்ளிக்கும், அரசியலார் அளிக்கும் உதவித் தொகை (Grant) யுடன் நடைமுறைச் செலவிற்கு உதவுதற் பொருட்டு இந்நிதி திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றுள்ளது. இது 'ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவில் திகழும் கல்வி நிலைய உதவிநிதி' எனப் பெயர் பெறும்.

2. இதன் பிற்சேர்க்கையில் விளக்கம் கண்டிருப்பதும் நம் பேரில் பட்டா மிராசுடன் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்துவருவதான தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்டு

திருவிடைமருதூர் சப்-ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலுக்கா 44-நிர் குரியமூலை வட்டம், விசுவநாதபுரம் கிராமத்தில் நன்செய், புன்செய் வகையரு ஏக்கர் 142-செண்ட் 98 பரப்புள்ள நிலங்களினின்று வரும் வருமானத்தில் சர்க்கார் கிஸ்தி, கிராமச் சிப்பந்திச் செலவு, கிராம சமுதாயச் செலவு வகையரு செலவுகள் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தைக்கொண்டு இதில் பின் விவரிக்கப்பெற்றுள்ள தருமங்கள் நடத்தப்பெறும்.

3. அ. திருப்பனந்தாளில் நம்மால் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர் தொடக்கப்பள்ளி (Higher Elementary School) அரசியலாருடைய உதவித் தொகையும் கொண்டு நடத்தப்பெற்றுவருகிறது. இனியும் இவ்வுயர் தொடக்கப் பள்ளியைத் தொடர்ந்து இடையீடின்றி நடத்துவதற் பொருட்டு நடைமுறைச் செலவிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 750/ முதல் ரூ. 1000/- வரையில் திருப்பனந்தாள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர் தொடக்கப்பள்ளி நிர்வாகக் குழு வசம் அளிக்கப்பெற்று வரும். ஷ உயர் தொடக்கப்பள்ளிக்கு அரசியலார் மாதந் தோறும் அளிக்கும் கிராண்டும், ஆண்டுக்கொருமுறை அளிக்கும் மானேஜ்மெண்ட் கிராண்டும் இனியும் தொடர்ந்து ஷ உயர் தொடக்கப் பள்ளியை நடத்துவதற்குரிய உதவி வருமானமாக இருந்துவரும். இவ்வுயர் தொடக்கப்பள்ளி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் உயர் தொடக்கப் பள்ளி யாகத்திகழும் வரையில் இவ்வுதவித் தொகை தரப்பெற்றுவரும்.

ஆ. திருலோக்கியில் நம்மால் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப்பள்ளி (Elementary School) அரசியலாருடைய உதவித் தொகையையும் கொண்டு நடத்தப்பெற்று வருகிறது. இனியும் திருலோக்கியில் தொடக்கப்பள்ளியைத் தொடர்ந்து இடையீடின்றி நடத்துவதற் பொருட்டு நடைமுறைச் செல விற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 350/– முதல் ரூ. 500/– வரையில் திருலோக்கி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப்பள்ளி நிர் வாகக்குழு வசம் அளிக்கப்பெற்றுவரும். திருலோக்கி தொடக் கப்பள்ளிக்கு அரசியலார் மாதந்தோறும் அளிக்கும் கிராண்டும் ஆண்டுக்கொருமுறை அளிக்கும் மானேஜ்மெண்ட் கிராண்டும் இனியும் தொடர்ந்து ஷ தொடக்கப்பள்ளியை நடத்துவதற்குரிய

உதவி வருமானமாக இருந்து வரும். இத்தொடக்கப்பள்ளி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் தொடக்கப் பள்ளியாகத் திகழும் வரையில் இவ்வுதவித் தொகை தரப்பெற்று வரும்.

இ. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் ஒரு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (Boys High School) நடத்தப்பெற்று வருகிறது. அதற்கு நம்மால் சிறுகச்சிறுக இதுவரையில் ரூ. 58,000/- நன்கொடையாகவும் அளிக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீவைகுண்டத்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி நன்கு நடைபெறுதற் பொருட்டு ஆண்டுதோறும் நடைமுறைச் செலவுக்கு ரூ. 1500/- (ருபா ஆயிரத்து ஐந்நூறு) நன்கொடையாக ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் வசம் கொடுக்கப்பெற்றுவரும். இவ்வுயர்நிலைப்பள்ளி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் விளங்கும் வரையில் இவ் வுதவித் தொகை அளிக்கப்பெற்றுவரும்.

ஈ. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் ஒரு உயர் தொடக்கப்பள்ளி (Higher Elementary School) நடத்தப்பெற்று வருகிறது. இவ்வுயர் தொடக்கப் பள்ளி நன்கு நடைபெறுதற் பொருட்டு ஆண்டுதோறும் நடைமுறைச் செலவுக்கு ரூ. 350/- (ருபா முந்நூற்றைம்பது) நன் கொடையாக ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர் தொடக்கப்பள்ளி நிர்வாகக் குழுத்தலைவர் வசம் கொடுக்கப் பெற்றுவரும். இவ்வுயர் தொடக்கப்பள்ளி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் உயர் தொடக்கப்பள்ளியாக விளங்கும் வரையில் இவ்வுதவித் தொகை அளிக்கப்பெற்றுவரும்.

உ. ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் ஒரு உயர்நிலைப்பள்ளி (High School) நடத்தப்பெற்று வருகிறது. அதற்கு நம்மால் சிறுகச்சிறுக இதுவரையில் ரூ. 85,000/- நன்கொடையாகவும் அளிக்கப்பெற்றுள்ளது. ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி நன்கு நடைபெறுதற் பொருட்டு ஆண்டுதோறும் நடைமுறைச் செலவுக்கு ரூ. 1500/- (ருபா ஆயிரத்தைந்நூறு) நன்கொடையாக

ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி நிர்வாகக்குழுத் தலைவர் வசம் கொடுக்கப்பெற்றுவரும். இவ்வுயர்நிலைப்பள்ளி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் விளங்கும் வரையில் இவ்வுதவித் தொகை அளிக்கப்பெற்றுவரும்.

ஊ. ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் ஒரு தொடக்கப்பள்ளி (Elementary School) நடத்தப்பெற்று வருகிறது. இத்தொடக்கப்பள்ளி நன்கு நடைபெறுதற்பொருட்டு ஆண்டுதோறும் நடைமுறைச் செலவுக்கு ரூ. 250/– (ரூபா இருநூற்றைம்பது) நன்கொடையாக ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப்பள்ளி நிர்வாகக் குழுத்தலைவர் வசம் கொடுக்கப்பெற்றுவரும். இத்தொடக்கப்பள்ளி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் தொடக்கப்பள்ளியாகத் திகழும் வரையில் இவ்வுதவித் தொகை அளிக்கப்பெற்றுவரும்.

4. அ. மேலே குறித்த ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெயரில் திகழ்ந்துவரும் ஆறு கல்விக்கூடங்களுக்கு மட்டும், (4 தொடக்கப் பள்ளிகளுக்கும் 2 உயர்நிலைப் பள்ளிகளுக்கும்) ஆண்டுதோறும் மேலே குறிப்பிட்டவாறு உதவித்தொகைகள் அளிக்கப்பெற்றுவரும். இங்ஙனம் நம்மால் அளிக்கப்பெறும் தொகையின் அளவு, நிகர வருமானத்துக்கு ஏற்பக் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

ஆ. மேலே குறித்த செலவினங்கள் போக எஞ்சிய தொகை நாம் விரும்பும் வேறு பிற தருமங்கள் செய்யப்பயன் படுத்தப்பெற்றுவரும்.

5. இதிற் குறிப்பிடப்பெற்ற நிலபுலங்கள் இனியும் நம் சுவாதீனத்திலும் பரிபாலனத்திலும், நமக்குப்பின் வரும் உரிமையுள்ளவர்கள் சுவாதீனத்திலும் பரிபாலனத்திலும் இருந்துவரும். இந்தச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 2,00,000/– உத்தேச ஆண்டு வருமானம் ரூ. 10,000/–

திருப்பனந்தாள்
23-3-1960 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 24—3—1960 as No. 769 of 1960 of Book 1, volume 1131 Pages 48 to 53.

1135-ம் ௵ தை, மாசி மாதங்களில்

கலைக்கோவிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
7279 & 80	மெய்கண்ட சாஸ்திரம் சங்கற்ப நிராகரணம் - சார்புக் கட்டுரை (2 Copies)	திருவாவடுதுறை ஆதீன வெளியீடு
7281	சங்கற்ப நிராகரணம் - சார்புக் கட்டுரை	ஷை
7282	அரிகரதாரதம்மியம் - பரப்பிரம விளக்கம்	ஷை
7283 to 84	உண்மை விளக்கம் முதலியன (2 Copies)	ஷை
7285	உண்மை விளக்கம் உதவிக் கட்டுரை	ஷை
7286	கொடிக்கவி உண்மை நெறி விளக்கம் குறிப்பு விளக்கக் கட்டுரைகள்	ஷை
7287	திருமந்திர முன்னுரை (ஆங்கிலத்திலும்)	ஷை
7288	திருமூலர் திருமந்திரம் கயிலாய சித்தர் உரை	ஷை
7289	திருமந்திர சிந்தனை நவாக்கரி சக்கரம்	ஷை
7290	திருமந்திரம் சிவயோகப் பகுதி முதலியன	ஷை
7291	திருமந்திரம் சிவயோக சிந்தனை	ஷை
7292	திருமூலர் திருமந்திரம் முதல் தந்திரம் பஞ்சாக்ஷர தீபம் என்னும் உரையுடன்	ஷை

(தொடரும்)

உ

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

‘திருமுறை வெளியீடுகள்’

		ரு. ந. பை
1	விநாயகர் திருமுறை	... 0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	... 6 00
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	... 3 00
4	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்)	... 2 50
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	... 2 25
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,,	... 1 30
7*	திருவாசகம் (புதிய பதிப்பு) ,,	... 0 50
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	... 2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு (மூலம்மட்டும்)	... 0 56
10*	திருமந்திரம் ,,	... 2 50
11	பதினோராந்திருமுறை ,,	... 1 25
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	... 0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	... 0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்)	... 2 50
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	... 0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	... 3 00
17	தாயுமான சுவாமிகள் பாடல்-குறிப்புரையுடன்	... 1 25
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	... 1 75
19	கந்தபுராணம் – முதல் முன்று காண்டங்கள் ,,	... 2 75
20	,, யுத்த தேவகாண்டம் ,,	... 2 00
21	,, தக்ஷகாண்டம் ,,	... 1 50
22	கந்தபுராண வசனம் அச்சில்	
23	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	... 0 25
24	கந்தரனுபூதி	... 0 13
25	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	... 0 37
26	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	... 0 06
27	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும்	... 0 37
28	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலம் ஹிந்தியும் கூடியது	... 0 50
29	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	... 0 06
30	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும்	... 1 00
31	திருக்குறள் - அறத்துப்பால் மூலம் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	... 1 50
32	திருக்குறள் – பொருட்பால் ,,	... 2 50
33	திருக்குறள் – காமத்துப்பால் ,,	... 1 00
	ஷெ 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	... 4 00

Registered With the Registrar of Newspapers for India
Under No R. No. 1485 57.

Regd No. M. 5574 குமரகுருபரன்.

34	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
35	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
36	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
37	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
39	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
40	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
41	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
42	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
43	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் [அச்சில்]		
44	தமிழிசைப்பாக்கள் [அச்சில்]		
45	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
46	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
47	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
48	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்)	...	0 31
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
52	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	ஷை ஷை பொருட்பால்	...	2 75
54	ஷை ஷை காமத்துப்பால்	...	1 20

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.

2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '60.